இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTER
வாராந்த மின்னிதழ்
அனைத்துலக தமிழ் ஊடக மையம்
Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1
இதழ் 264 சனி, டிசம்பர் 09, 2023 14 பக்கங்கள்


# தமிழரசுத் தலைமைப் போட்டி கட்சியில் பிளவை ஏற்படுத்துமா?






அகிலன்

## கால் நடை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு என்ன???

ஹஸ்பர் ஏ ஹலீம்



## தேசத்தின் குரல் பாலாண்ணாவின் 17ஆம் நிறைவாண்டின் நினைவில்... 14.12.2023



## 4 லனாய்வாளர்கள் கண்காணிப்பில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள்

சீலன் சிவயோகநாதன் செவ்வி



© 2023 இலக்கு இணையம்

## திருகோணமலையில் மனித உரிமை தின வாரம் அனுஷ்டிப்பு



சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு AHRC நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாலையூற்று கிராமத்தில் சிவில் அமைப்புக்களினால் புதன்கிழமை மாலை (06) மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

பாலையூற்று மாதர் சங்க கட்டடத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மனித உரிமைகள் தொடர்பான தெளிவூட்டலும், காணி சட்டங்கள் தொடர்பாகவும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உரிமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த நிகழ்வில் சிவில் செயற்பாட்டாளர்கள், மாதர்சங்க உறுப்பினர்கள் கிராமமக்கள் மற்றும் AHRC நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

குச்சவெளி பிரதேச சபை மண்டபத்திலும் மனித உரிமைகள் தின வாரத்தை முன்னிட்டு மனித உரிமைசார்ந்த நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு AHRC நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களினால் டிசம்பர் 04ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை மனித உரிமைகள் தின வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இலங்கை மீண்டதாக அறிவிப்பு

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி முடிவுக்கு வந்துவிட்டதாக அனைத்துலக நாணயநியதியம் விரைவில் அறிவிக்கும் என இலங்கை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த புதன் கிழமை(6) தெரிவித்துள்ளார்.

எனினும் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் காலம் எடுக்கலாம். அதற்கான திட்டங்களை நாம் வகுக்கவேண்டும். எதிர்வரும் 10 ஆண்டுகளில் இந்த வீழ்ச்சி மீண்டும் நிகழலாம். எனவே ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கும் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

300000 நிலப்பகுதி விவசாயத்திற்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. அதேசயம், 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை கவரும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இது 5 மில்லியனாக அதிகரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

## ரணில் – உலகத்தமிழர் பேரவை சந்திப்பு



உலகத்தமிழர் பேரவைக்கும் இலங்கை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை (7) நடைபெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் இலங்கையின் முக்கியமான பௌத்த மத பீடங்களின் அரசியல் துறவிகளும் கலந்துகொண்டாதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை

தொடர்ச்சி 06 ஆம் பக்கம்

## மத்திய கிழக்கு கடற்படை கூட்டணியில் இணைந்தது இலங்கை

கூட்டு கடற்படை பிரிவு எனப்படும் 38 நாடுகளை கொண்ட அமெரிக்கா மற்றும் பிரித்தானியா தலைமையிலான மத்தியகிழக்கு கடற்படை கூட்டணியில் இலங்கை கடந்த மாதம் இணைத்துக்கொள்ளப்பட் டுள்ளது.

இலங்கை இந்த படையணியில் இணைக்கப்பட்டது தமக்கு மிகவும் பலம் சேர்த்துள்ளதாக அந்த அமைப்பின் கட்டளை அதிகாரி வைஸ் அட்மிரல் பிராட் கூப்பர்




தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டணி கடற்கொள்ளையை தடுத்தல்,

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

## விண்வெளிக்கு மிருகத்தை அனுப்பியது ஈரான்



ஈரானின் தொழில்நுட்ப வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது. இந்த நிலையில் ஈரான் விண்வெளிக்கு கடந்த புதன்கிழமை(6) மிருகத்தை அனுப்பியுள்ளது.

மேற்குலக நாடுகள் மனிதர்களை அனுப்புவது தொடர்பில் சிந்தித்து வருகையில் ஈரான் மிருகத்தை அனுப்பியுள்ளது. ஈரானினால் தயாரிக்கப்பட்ட ஏவுகணை செயற்கைக்கோளை 130 கி.மீ தொலைவில் உள்ள சுற்றுவட்டப் பாதைக்கு எடுத்துச் சென்றிருந்தது. செயற்கைக்கோளின் எடை 500 கிலோ என தெரிவிக்கப்படுகின்றது. ஈரானினால் அனுப்பப்பட்ட செயற்கைகோள்களில் இது மிகவும் பெரியதாகும்.

எனினும் எந்த வகையான மருகத்தை விண்வெளிக்கு அனுப்பியது என்பது குறித்து ஈரான் தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை. செயற்கை கோளினை ஈரானின் விண்வெளி ஆய்வு மையமும், ஏவுகணையை ஈரானின் படைத்துறையும் வடிவமைத்ததாக கூறப்படுகின்றது.

விண்வெளிக்கு மிருகங்களை அனுப்புவது தொடர்பான ஆய்வுகளை 2000 ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து ஈரான் ஆரம்பித்திருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் முயற்சி வெற்றிபெற்றிருந்தது. அதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் இரண்டு குரங்குகளை விண்வெளிக்கு அனுப்பி பின்னர் மீண்டும் திரும்ப பூமிக்கு கொண்டு வந்திருந்தது.

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

## ஐ.நாவின் சரத்து 99ஐ பயன்படுத்திய ஐ.நா செயலாளர்



ஐக்கிய நாடுகள் சபையின் சரத்து 99 ஆவதை பயன்படுத்தி காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்ரொனியோ குரெரஸ் கடந்த புதன்கிழமை (6) முயற்சிசெய்துள்ளார்.

ஐ.நா செயலாளர் நாயகம் இதனைபயன்படுத்தினால்அதனை ஐ.நாவின் பாதுகாப்புச் சபை கருத்தில் எடுத்து நடைமுறைப் படுத்த வேண்டும். உலகின் பாதுகாப்புக்கும், அமைதிக்கும் ஆபத்துக்கள் ஏற்படும்போது ஐ.நா செயலாளர் நாயகம் இந்த சரத்தை பயன்படுத்தி பாதுகாப்புச் சபையின் நடவடிக்கையை கோர முடியும்.

காசாவில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் வான் தாக்குதல்கள் மற்றும் படை நடவடிக்கைகள் காரணமாக பெருமளவான மக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் வரும் நிலையில் அங்கு ஒரு போர் நிறுத்தத்தை மேற்கொள்வதற்கு பல நாடுகளும் அமைப்புக்களும் மேற்கொண்டு வருகின்றன.

தற்போது அங்கு இடம்பெறும் போர் உலகின் அமைதிக்கு மிகவும் ஆபத்தானது என ஐ.நாவின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா செயலாளர் நாயகத்தின் கோரிக்கையை ஏற்று

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இலங்கைக்கும் – ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் உறவுகளை வலுப்படுத்தும் கூட்டம்



இலங்கைக்கும்- ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான உறவுகளை மீளாய்வு செய்து உறவுகளை பலப்படுத்தும் கூட்டம் ஒன்று அடுத்த வருடத்தின் முற்பகுதியில் இடம்பெறவுள்ளதாக இலங்கை அரச தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கை தூதுவர் கிரேஸ் ஆசீர் வாதம் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆசிய பசுபீக் பிராந்தியத்திற்கான உதவி பணிப்பாளர் பாவோலா பம்பலோனியுடன் மேற்கொண்ட சந்திப்பின் பின்னர் இந்த முடிவு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசியல், சட்டஒழுங்கு, நல்லாட்சி, மனித உரிமைகளின் மேம்பாடு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடாபில் ஐரோப்பிய ஒன்றியம் திருப்தி தெரிவித்துள்ளதாக ஆசீர்வாதம் தெரிவித்துள்ளார். இரு தரப்பினரும் இது

தொடர்ச்சி 06ஆம் பக்கம்

# 39வது ஒதியமலைப் படுகொலை நினைவு தினம்

இலங்கைத்தீவில் நடைபெற்று வரும் தமிழ் மக்களுக்கு எதிரான அரச வன்முறைகளுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. இதில் மிக மோசமான ஒரு அம்சம் இலங்கைத் தமிழர்களின் பாரிய அளவிலான படுகொலைகள் ஆகும். இவைகளில் சில தமிழர்களின் ஆழ்மனதில் ஆறாத பதிவுகளாக நிலைத்துள்ளன. அதில் ஒரு படுகொலைதான் 39 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்றற ஒதிய மலைப் படுகொலை.



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசசெயலாளர் பிரிவில் நெடுங்கேணிக்கு அருகில் ஒதியமலை என்ற கிராமம் அமைந்துள்ளது. தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் குற்றச் செயல்களில் தண்டனை பெற்ற சிங்களக் குற்றவாளிகளும் அவர்கள் குடும்பங்களும் இராணுவப் பாதுகாப்புடன் சிங்கள அரசு குடியேற்றி வந்தது. அந்த வகையில் கென்பாம், டொலர்பாம் போன்ற இடங்களைத் தொடர்ந்து ஒதியமலைப் பகுதியிலும் குடியமர்த்தப்பட்டார்கள்.

1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தொன் பதாம் திகதியிலிருந்து மார்கழி இரண்டாம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. மார்கழி மாதம் முதலாம் திகதி பதவியாவிலிருந்து ஒதியமலை கட்டுக்கரை ஊடாக வந்த இராணுவத்தினர் ஒதியமலைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தனர். மக்கள் அதிகாலை வீட்டின் கதவுகளைத் திறந்தபோது பச்சை நிற உடைகளுடனும் ஆயுதங்களுடனும் இராணு வத்தினர் நின்றனர். “நாங்கள் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தினுள் கூட்டம் வைக்கப் போகிறோம் ஆம்பிளைகள் மட்டும் வாங்கோ” என சரளமாகத் தமிழில் கூறி முப்பதிற்கும் மேற்பட்ட ஆண்களை இராணுவத்தினர் கைது செய்து கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திற்குள் அழைத்துச் சென்று அவர்களின் கைகளை பின்னாற் கட்டி சித்திரவதை செய்து சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

இராணுவம் சென்றபின் அங்கு சென்று பார்த்தபோது கைது செய்யப்பட்டவர்களில் இருபத் தேழு பேர் மிகவும் கோரமாக கொல்லப்பட்டு மண் டபத்தினுள் கிடந்தார்கள்.

இறந்தவர்களில் அனேகர் திருமணமாகிக் குடும் பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். பலர் முதியவர்கள், சிலர் கிளிநொச்சி மாவட்டம் பளை பகுதியிலிருந்து வயல் வேலைக்காக ஒதியமலை வந்தவர்கள். வேறு சிலர் அயல் கிராமமான பட்டிக்குடியிருப்பிலிருந்து உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்தவர்களாவார்கள். இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத் தினை தொடர்ந்து ஒதியமலைக் கிராம மக்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் உள்ள பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்தார்கள்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் நா.கநத்சாமி இப்படுகொலை தொடர்பாக கூறுகையில்:

“அன்றைய தினம் காலை 6.30 மணியளவிலே எமது கிராமத்திற்குள் புகுந்த இலங்கை இராணுவத்தினர் எமது கிராமத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, எமது கிராம மக்களில் கண்ணிற் பட்டவர்களையெல்லாம் பிடித்து ஓரிடமாக்கி அவர்களது மேலங்கியைக் கழற்றி அதனைக் கொண்டு அவர்களது கைகளைப் பின்பக்கமாகக் கட்டி ஒதியமலைக் குளக்கட்டருகே கொண்டுவந்தனர். அந்த நேரத்திலே அவ்வீதியாற் சென்ற

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# மனித உரிமைகள் பிரகடனத்துக்கும் ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கத்துக்கும் 75வது ஆண்டு!

உலகில் உள்ள அனைத்து மனிதர்களதும் சமத்துவ சகோதரத்துவ சுதந்திர நல்வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் வளர்ச்சிகளுக்குமான உலகின் முக்கிய நெறிப்படுத்தல் மரபு சாசனமாக 10.12.1948 இல் ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் பிரகடனத்துக்கு இவ்வாண்டு டிசம்பர் 10ம்நாள் 75வது ஆண்டு. இதனை ‘மனித உரிமைகள் 75’ என்ற சுருக்கப் பெயருடன் 10.12.2023 இல் உலகப் பெருவிழாவாக ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்துள்ளது. இவ்வாண்டு "அனைவருக்கும் விடுதலை, சமத்துவம், நீதி" என்ற மையக்கருவும் ஐக்கிய நாடுகள் சபையால் மொழியப்பட்டுள்ளது. ஆயினும் மனித உரிமைகள் பிரகடனம் சட்டமாக அமைக்கப்படாது நெறிப்படுத்தல் ஆவணமாகவே கட்டமைக்கப்பட்டுள்ளதால் உலகநாடுகளில் மனித உரிமைகள் பிரகடனங்களை அனைத்துலகச் சட்டத்தின் வழி கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்தவியலாத நிலையும் ஐக்கியநாடுகள் சபைக்கு உள்ளது. இந்நேரத்தில் ‘இலக்கு’, ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகளை மக்களுக்கு உறுதிப்படுத்தப்படும் பொழுது தான், அனைவருக்குமான விடுதலை சமத்துவம் நீதி நடைமுறைச் சாத்தியமாகுமென்ற நடைமுறை எதார்த்தத்தைத் தானும் வலியுறுத்திக் கூற விரும்புகிறது. இதனை ஐக்கிய நாடுகள் சபை ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை கடந்த 75 ஆண்டுகளாக உண்மையுடனும் நேர்மையுடனும் செய்யாத காரணத்தாலேயே இன்று ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனம் வெளியாகிய 75வது ஆண்டில் ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கத்துக்கும் 75வது ஆண்டு என இணைத் தலையங்கம் இடவேண்டியுள்ளது.

குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை நன்கு அறிந்த நிலையிலேயே 2009 இல் 176000 ஈழத்தமிழர்களைச் சிறிலங்கா முள்ளிவாய்க்காலில் இனவழிப்புச் செய்தது. ஆயினும் கடந்த 14 ஆண்டுகளாக முப்பது ஆண்டுகால அனுபவம் உள்ள அனைத்துலக மனித உரிமைகள் ஆணையகத்தாலும் அனைத்துலகச் சட்டங்களால் சிறிலங்காவை அனைத்துலக நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்த இயலாதிருக்கிறது. இதற்கு எவை காரணங்க ளாக உள்ளன? முதல் நிலையில் வெளியகக் காரணமாக ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமையைத் தனது இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராகத் தமிழக மக்களுக்கு அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் சக்தி என்ற இந்தியாவின் தேவையற்ற அச்சம் உள்ளது. இதன் காரணமாக சிறிலங்காவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் இந்தியா முன்னுரிமை கொடுத்து ஈழத்தமிழர்களைச் சிறிலங்காவின் இறைமைக்குள் சிறைப்படுத்துவதையே தனது தலைமை அரசியல் நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருகிறது. இதுவே ஐக்கிய நாடுகள் சபைக்கும் உலக நாடுகளுக்கும் அனைத்துலக காலனித்துவத்தால் தீர்க்கப்படாத பிரச்சினையாகவுள்ள ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் சந்தை மற்றும் இராணுவ நிலையை மீற இயலாதவாறு பின்னடைவை ஏற்படுத்துகிறது. அடுத்து ஈழத்தமிழ் அரசியல்வாதிகளும் புலம்பெயர் ஈழத்தமிழர் அரசியல் செயற்பாட்டாளர்களும் தாங்கள் இறைமையுள்ள தாயகமாக இலங்கையைக் கொண்டிருக்கும் மக்கள் என்ற அடிப்படையில் தங்கள் சமூக அரசியல் பொருளாதார ஆன்மீக பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கோரிக்கைகளாக முன்வைப்பதில் காட்டி வரும் பின்னடைவு. இது சிறிலங்காவின் இறைமையை மீறிச் செயற்பட இயலாத நிலையை ஐக்கிய நாடுகள் சபைக்கும் உலகநாடுகளுக்கும் ஏற்படுத்துகிறது.

தாயகத்தில் மக்களின் கூட்டொருங்குத் தலைமை ஒவ்வொருவருக்கும் அவரவர் பங்களிப்பைத் தங்கள் தாயக தேசிய தன்னாட்சி உரிமைகள் சிறப்புற அளிக்க உதவும் என்றும் உண்மையானதும் நேர்மையானதுமான செயற்பாட்டுத் தலைமையின் விளைவாகச் சிறப்பான தலைமை மக்களின் எண்ணங்களைத் தேவைகளை வெளிப்படுத்தும் தலைமையாகத் தோன்றும் என்றும் கொண்ட எதிர்பார்ப்பே தனியான தலைமைத்துவம் ஒன்றின் தேவையின்மையை ஈழத்தமிழருடைய கட்சி அரசியல் அனுபவங்களின் பின்னணியில் உருவாக்கியது. ஆனால் கூட்டொருங்கு மக்கள் தலைமைத்துவம் தோன்ற இயலாதவாறு ஈழத்தமிழர்களின் பாராளுமன்றக் கட்சியாளர்கள் 2009 முதல் இன்று வரை தடையாக உள்ளனர். மாணவர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், நாட்டு வைத்தியர்கள், பௌத்ததேரர்கள் என்னும் ஐங்குழுவினரின் கூட்டொருங்குச் செயற்பாட்டின் மூலமான ஐங்குழுத்தலைமையின் மூலமே இலங்கையின் முன்னாள் பிரதமர் சொலமன் டயஸ் பண்டாரநயக்கா சிங்கள பௌத்த தலைமையினை தமிழர் தாயகத்தையே ஆக்கிரமிக்கும் பலம்படைத்த தலைமையாகச் சிங்கள அரசியலை மாற்றினார் என்பது வரலாறு. ஆனால் ஈழத்தமிழ் அரசியல் வாதிகளும் புலம்பெயர் ஈழத்தமிழ்ச் செயற்பாட்டாளர்களும் மாணவர், ஆசிரியர், தொழிலாளர்கள் வர்த்தகர்கள் சமூகத் தலைவர்கள் ஒருங்கிணைப்புக்களை இதுவரை தோற்றுவிக்காததும் அதன் வழியான கூட்டொருங்குத் தலைமையினை வெளிப்படுத்தாததும் ஈழத்தமிழர்களின் ஒருங்கிணைப்புத் தலைமைத்துவத்தின் வலிமை வீறு கொண்டெழாமைக்கான மூலகாரணமாகவுள்ளது.

அதே வேளை ஈழத்தமிழர்களின் அனைத்துலக ஏற்புக்கான பின்னடைவுக்கு குழுநிலையில் தாயகத்திலும் புலத்திலும் தம்மை ஈழத்தமிழ் அரசியல்வாதிகளாகவும் அரசியல் செயற்பாட்டாளர்களாகவும் மக்களாணை எதுவுமின்றி தம் தன்னலங்களுக்காக வெளிப்படுத்தி வருபவர்களின் செயற்பாடுகள் விளங்குகின்றன என்பதே உண்மை. இவ்வாரத்தில் கூட ஒரு குழுத் தமிழர்கள் இலண்டனில் இருந்து கொழும்பு சென்று சிறிலங்காவின் ஜனாதிபதியையும் பௌத்த தேரர்களையும் எந்த நிபந்தனைகளையோ செயற்திட்டங்களையோ முன்வைக்காது ஈழத்தமிழர்களின் புலத்துப் பொருளாதார முதலீடுகளுக்கான முகவர்களாகத் தங்களை இணைத்துக் கொள்ளும் நோக்கிலேயே சந்தித்து தங்கள் தன்னலங்களுக்கு உலக மட்டத்தில் சிறிலங்கா ஜனாதிபதியிலும் பௌத்த மகாசபையிலும் நம்பிக்கையும் அவர்களின் வழிப்படுத்தலில் ஆர்வமும் புலம்பெயர் ஈழத்தமிழர்களுக்கு உள்ளதெனக் காட்டியுள்ளனர். இது அனைத்துலக மட்டத்தில் இன்றைய சிறிலங்கா அரசை இலங்கையில் உள்ள எல்லா மக்களுக்குமான பலமான அரசாக வெளிப்படுத்தியுள்ளது. இதன் வழி சிறிலங்காவில் இனப்பிரச்சினையோ மொழிப்பிரச்சனையோ இலங்கைத் தீவில் இல்லை, எனவே அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்ற சிறிலங்காவின் பரப்புரையை உண்மையாக்கி அனைத்துலக நாடுகள் சிறிலங்கா இனநல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் சிறிலங்காவுக்கு நிதி உதவி மூலம் அதனைப் பலமான அரசாக திடப்படுத்த உதவும் செயலாகவுள்ளது. கூடவே இவ்வார இறுதியில் மற்றொரு அனைத்துலக நகர்வாக இலங்கையில் சீனாவின் கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தின் வளர்ச்சிக்கான அனைத்துலக பரப்புரையாளராக பிரித்தானிய பிரதமர் பதவியில் இருந்து விலகிய பின் செயற்பட்டுத் தற்போது பிரித்தானிய வெளிவிவகார அமைச்சராகப் பிரபுக்கள் சபை நியமனத்தின் மூலம் பதவியேற்றுள்ள டேவிட் கமரூன் அவர்களிடம் எட்டு மனித உரிமைகள் அமைப்புக்கள் பாலியல் சித்திரவதைகள் உள்ளடங்கலாக மனிதச் சித்திரவதைக் கூடமாக 2009ம் ஆண்டு சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்புக்குப் பின் விளங்கிய யோசப் முகாமின் பொறுப்பாளராக இருந்த முன்னாள் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா மற்றும் ஜகத் சூரியா போன்ற இலங்கையில் யுத்தக்குற்றங்கள் செய்தவர்களுக்கு பயணத் தடைகள் உட்பட்ட மக்னிட்ஸ்கி தடைகளை விதிக்கும் படி கோரிக்கை முன்வைத்துள்ளனர். இதற் கிடையே தாய்லாந்துக்கு இன்னொரு தமிழர் குழு சென்று இந்துத்துவாக் கொள்கைகளைப் பலப்படுத்தி இந்திய ஆதரவைப் பெற முயன்றுள்ளது. ஆயினும் யாரும் இனஅழிப்பு குறித்து எதுவும் பேசவில்லை. இவர்களுக்கு எல்லாம் ஈழத்தமிழர் இறைமையுடன் அவர்களின் இனஅழிப்பின் பின்னணியில் மண் மீட்கப்பட வேண்டுமென்பது பேசப்பட்டாலே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தாலும் அனைத்துலகச் சட்டங்களாலும் ஈழத்தமிழரைப் பாதுகாக்க இயலும் என்பதை இலக்கு வலியுறுத்திக் கூறவிரும்புகிறது.

**ஆசிரியர்**

# தமிழரசுத் தலைமைப் போட்டி
# கட்சியில் பிளவை ஏற்படுத்துமா?






**அகிலன்**

ஜனாதிபதித் தேர்தல்தான் அடுத்த வருடத்தில் முதலில் நடைபெறும் என ரணில் விக்கிரமசிங்க உறுதியாகக் கூறிவிட்டார். அதனைத் தொடர்ந்து பொதுத் தேர்தலும் மாகாண சபைகளுக்கான தேர்தல்களும் நடைபெறும் எனவும் கொழும்பில் தன்னைச் சந்தித்த உலகத் தமிழர் பேரவையின் பிரதிநிதிகளிடம் ரணில் கூறியிருக்கின்றார்.

ஆனால், தமிழர்களைப் பொறுத்தவரையில், அதற்கு முன்னதாக நடக்கப்போகும் தேர்தல் ஒன்று குறித்தே அனைவரது கவனமும் குவிந்துள்ளது. தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அது குறித்த பரபரப்பு தமிழ் அரசியல் பரப்பில் சூடுபிடித்துள்ளது.

அடுத்த வருடத்தில் நடைபெறப்போகும் முதலாவது தேர்தலாக தமிழரசுத் தலைமைக்கான தேர்தல்தான் இடம்பெறும், களத்தில் குதித்துள்ள இருவரில் ஒருவர் வாபஸ்பெறாத நிலையில்...

தமிழரசுக் கட்சி இந்தத் தேர்தலால் முக்கியமான ஒரு திருப்புமுனையில் நிற்கின்றது. சுமார் பத்து வருடங்களுக்குப் பின்னர் புதிய தலைவர் ஒருவர் தமிழரசுக் கட்சிக்கான தெரிவு செய்யப்படவுள்ளார். சுமார் நான்கு வருடங்களாகக் கூட்டப்படாதிருந்த தமிழரசுக் கட்சியின் பொதுச் சபையை இதற்காக ஜனவரி மாத இறுதிப் பகுதியில் கூட்டுவதற்கு கட்சித் தலைமை தீர்மானித்திருக்கின்றது.

மாவை சேனாதிராஜா பத்து வருடங்களுக்குப் பின்னர் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார். தமிழரசுக் கட்சிக்குள் இன்று உருவாகியுள்ள தலைமைத்துவப் போட்டி கட்சியை மேலும் பிளவுபடுத்துமா அல்லது பலப்படுத்துமா என்ற கேள்விகளும் எழுப்பப்படுகின்றது.

### புலிகளுக்குப் பின்னர்..

2009 வரையில் தமிழ் மக்களுடைய போராட்டத்தில் தலைமைப் பாத்திரத்தை ஏற்றிருந்த விடுதலைப் புலிகளுக்குப் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. அதன் பின்னர் இடம்பெற்ற பேச்சுக்களில் கூட்டமைப்பு நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தாலும் கூட, அதனால், தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுத்தர முடியவில்லை.

அதேவேளையில், விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட அந்தக் கூட்டமைப்பு இன்று உடைந்து சிதறிப்போன நிலையில் காணப்படுகின்றது.

கூட்டமைப்புக்கென ஒரு தலைமைப் பதவி இல்லாத போதிலும் கூட, அதன் பாராளுமன்றக் குழுவின் தலைவராகத் தெரிவான சம்பந்தனே 2010 முதல் அதன் தலைவராகவும் கருதப்பட்டார். ஒவ்வொரு தேர்தல்களின் போதும் ஒவ்வொரு கட்சியாக அதிலிருந்து களண்டு செல்ல, இப்போது தமிழரசுக் கட்சி தனித்து நிற்கின்றது. தாம்தான் கூட்டமைப்பு என அவர்கள் சொல்லிக்கொண்டாலும், 5 கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணி தாமே கூட்டமைப்பு எனக் கூறிக்கொள்கின்றது.

### உடைவுக்கு காரணம்?

கூட்டமைப்பு உடைந்து சென்றமைக்கான பிரதான காரணமாக இருப்பது தமிழரசுக் கட்சிதான் என்பதில் சந்தேகம் இல்லை. தமிழரசுக் கட்சித் தலைமையின் மேலாதிக்க மனோபாவமும், ஏனைய கட்சிகளை ஆயுதக் குழுக்கள் என தமிழரசுக் கட்சியினர் அவர்களச் சிறுமைப்படுத்தி ஓரங்கட்ட முனைந்தமையும்தான் கூட்டமைப்பு உடைவதற்கு பிரதான காரணம். தமிழரசுக் கட்சித் தலைமையின் இந்த மேலாதிக்க போக்கை அக்கட்சியிலுள்ள பலரும் விரும்பியிருக்கவில்லை.

அதேவேளையில், தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் பலர் கட்சித் தலைமையின் செயல்திறனின்மையால் அதிலிருந்து வெளியேறினார்கள். குறப்பாக தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அவரது தலைமைத்துவம் பல சந்தர்ப்பங்களில் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. போராட்டங்களின் போது ஆதரவாளர்களைக் கூட திரட்ட முடியாதளவுக்கு பலவீனமான நிலையில்தான் மாவை இருந்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் பொதுச் சபையை கூட்டாமல் அவர் காலத்தைக் கடத்துவதற்கும், தலைமைப் பதவி தன்னிடமிருந்து பறிபோய்விடும் என்ற அவரது அச்சம்தான் காரணமாகச் சொல்லப்பட்டது.

ஆனால், கட்சிக்குள் உருவாகியுள்ள கொந்தளிப்பு மற்றும் பொதுச் சபையைக் கூட்ட வேண்டும் என்பதற்கான தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாக, மாவையர் அடிபணிவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. இந்தப் பின்னணியில்தான் நவம்பர் 30 இல் நியமனப் பத்திரங்கள் கோரப்பட்டு, ஜனவரி 27 இல் நடைபெறும் பொதுச் சபைக் கூட்டத்தில் தலைவர் தெரிவு இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

### களத்திலுள்ள மூவர்

தற்போதைய நிலவரப்படி தமிழரசுக் கட்சியின் மூன்று முக்கியஸ்த்தர்கள் தலைவர் பதவிக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருக்கின்றார்கள். எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் தலைமைப் பதவிப் போட்டியில் இருக்கின்றார்கள்.

இதற்கான தேர்தல் நடைபெறுமாக இருந்தால் தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் மூலமாக தலைவர் தெரிவு இடம்பெற்றதாக இருக்கும். இதுவரை காலமும் போட்டியின்றி ஏகமனதாகவே தலைவர் தெரிவு இடம்பெற்றது.

யோகேஸ்வரன் தேத்தலுக்கு முன்னதாக தமது நியமனத்தை திரும்பப் பெற்றுக்கொண்டு மற்றைய இருவரில் ஒருவரை ஆதரிக்கலாம் என்றும் மட்டக்களப்பிலுள்ள தமிழரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளையில், செயலாளர் பதவி அவருக்கு வழங்கப்படலாம் என்றும் சொல்லப்படுகின்றது.

தலைவர் வடக்கைச் சேர்ந்தவராக இருந்தால், செயலாளர் பதவி கிழக்கைச் சேர்ந்த ஒருவருக்கு வழங்கப்படும் வழமை தமிழசுக் கட்சியில் உள்ளது. தலைவர் கிழக்கைச் சேர்ந்தவராக இருந்தால், செயலாளர் பதவி வடக்குக்கு வழங்கப்படும். சம்பந்தன் தலைவராக இருந்த போது மாவை செயலாளராக இருந்தார் என்பதும் கவனிக்கத்தக்கது.

பொதுச்சபையின் உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாக சபையை அதன் பொதுச் சபைதான் தெரிவு செய்யும். கட்சிக்கு சுமார் 50 வரையிலான பிரதேசக் கிளைகள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ளன. ஒவ்வொரு கிளைகளினதுத் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட ஐந்து பேர் பொதுச் சபையில் இடம்பெறுகின்றார்கள். அதனைவிட கட்சியின் முக்கிய பதவிகளில் உள்ள சிலரும் பொதுச் சபை உறுப்பினர்களாக தலைவரால் நியமிக்கப்படுவார்கள். அதற்கான அதிகாரம் தலைவருக்குள்ளது.

அதனால், பொதுச் சபையில் சுமார் 250 பேர் வரையில் இருப்பார்கள். கட்சிப் பதவிகளுக்கான தேர்தலில் வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கே உள்ளது.

### யாருக்கு ஆதரவு?

ஆக, இந்த பொதுச் சபை உறுப்பினர்களை இலக்குவைத்ததாகவே சுமந்திரனும், சிறிதரனும் தமது பரப்புரைகளை முன்னெடுக்கப் போகின்றார்கள். இந்த இருவரில் யாருக்கு அதிகளவுக்கு ஆதரவு உள்ளது என்பதற்கான தெளிவான பதில் இதுவரையில் கிடைக்கவில்லை.

சுமந்தினைப் பொறுத்தவரையில் சர்வதேச விவகாரங்களைக் கையாளக் கூடிய ஒருவராக அவரை முன்னிலைப்படுத்துபவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், அவருக்கு எதிரான

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

நேர்காணல்

# புலனாய்வாளர்கள் கண்காணிப்பில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள்



**சர்வதேச மனித உரிமைகள் தினம் நினைவு கொள்ளப்படவிருக்கும் நிலையில் தமிழ் மக்களுடைய அனைத்துவிதமான உரிமைகளும் பறிபோகின்ற ஒரு நிலைதான் இலங்கைத் தீவில் காணப்படுகின்றது. மாவீரர் தின நிகழ்வை நினைவுகூர்ந்த பலர் பழிவாங்கப்படுகின்றார்கள். தமிழ் மக்களின் காணி உரிமைகள் பறிக்கப்படுகின்றன. இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக ஒன்றித்தின் தலைவரும் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை P2P அமைப்பின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளருமான சிவயோகநாதன் சீலன் அவர்கள் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**

## சீலன் சிவயோகநாதன் செவ்வி

**தமிழ்ப் பகுதிகளின் மனித உரிமைகள் நிலை எவ்வாறிருக்கின்றது? உங்களுடைய பார்வை என்ன?**

வடக்கு,கிழக்கு பிரதேசங்களில் மனித உரிமை செயற்பாடு மிக மோசமாக உள்ளது. மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தல் செய்யப்படுகின்றார்கள். தமிழர் பகுதிகளில் அண்மையில் நடந்த மாவீரர் நாள் செயற்பாடுகள் மற்றும் காணி அபகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபடும் போதும் சரி, அதற்கு எதிராக செயற்படும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தல் செய்யப்படுவது மாத்திரம் அல்ல, இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் தொடர்ச்சியாக கண்காணிப்பு செய்யப்படுகின்றார்கள்.

அது மாத்திரமல்ல நேரடியாக மற்றும் மறைமுகமாகவும் வேறு நபர்களை வைத்து மனித உரிமை செயற்பாட்டாளர்கள் நாளாந்தம் கண்காணிப்பு செய்யபடுகிறார்கள். யுத்தம் நடைபெற்ற காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் குறிப்பிட்ட இடங்களில் மாத்திரம் இருந்தது.

அப்போது சர்வதேசம் பார்த்து கொண்டிருந்தது இப்போது போர் மௌனிக்கப்பட்டு சமாதானம் என்ற போர்வையில் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் நசுக்கப்படுகிறார்கள். குறிப்பாக அண்மையில் பயங்கர வாத தடைச் சட்டத்தின் கீழ் கைது நடைபெற்றுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டம் மனித குலத்திற்கு ஒரு மோசமான சட்டம். அதனை சர்வதேச நாடுகள் உடனடியாக நீக்க வேண்டும் என்று கோரிக்கை முன் வைத்தாலும் அதனை செய்வதாக கூறி. இதுவரை அதனை இலங்கை அரசாங்கம் நீக்கவில்லை.

கடந்த 27-11-2023 அன்று கூட மாவீரர் நிகழ்வுகளில் பங்கு பற்றியவர்களை பொய்யான ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து அவர்கள் இந்த பயங்கர வாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

இதில் பயங்கரவாதம் என்றால் என்ன? என்று அறியாத அளவிற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 11 பேர் கைது செய்யப் பட்டனர்.

காரணம் தொழில் ரீதியாக ஒலி பெருக்கி கொண்டு சென்றவர்கள், சிவப்பு மஞ்சள் கொடி, மாவீரர் என்ற பெயர் போன்ற காரணங்களால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எந்த ஒரு பொது நிகழ்வுகளும் செய்ய முடியாது மனித உரிமை மீறல்கள் அதிகரித்து தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் மனித உரிமை செயற்பாடு என்பது ஒரு அச்சுறுத்தலாகவே காணப்படுகிறது.

**மாவீரர் தின நிகழ்வுகள் இந்தக் கட்டுப்பாடுகளின் மத்தியில் இடம் பெற்றிருக்கின்றது. மக்கள் இதில் எந்தளவுக்கு உணர்வுபூர்வமாக கலந்து கொண்டனர்?**

எதிர் பார்த்ததை விட மக்கள் அதிகமாக அஞ்சலி செலுத்துவதற்காக கலந்து கொண்டார்கள். காவல் துறையினர், இராணுவம், புலனாய்வு பிரிவினர் என பலரது அடக்குமுறை இருந்தாலும், மக்கள் அவரவர் இடங்களுக்கு சென்று அவர்களது கடமைகளை செய்து விட்டு வந்தார்கள்.

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்த போது காவல் துறையினர் அடாவடித்தனம் புரிந்தார்கள். தமிழர்களால் புனிதமாக மதிக்கும் இடத்தில் சப்பாத்து காலுடன் சென்று. சிவப்பு மஞ்சள் கொடிகள் அகற்றி. ஒலிபெருக்கியை பறிமுதல் செய்து அட்டகாசம் செய்தார்கள்.

அதேபோல் மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் காவல் துறையினர் இட்ட உத்தரவுகளை மதித்து ஒலிபெருக்கி மற்றும் சிவப்பு மஞ்சள் கொடிகள் இன்றி, ஒரு குறுகிய நேரத்தில் எந்தவித ஏற்பாடும் இன்றி மக்கள் பல ஆயிரம் பேர் வந்து அஞ்சலி செலுத்தினர். இனி வரும் காலங்களில் இந்த நிகழ்வை செய்வதற்கு ஒரு ஏற்பாட்டுக் குழு அல்லது அதற்கான அமைப்பு தேவை இல்லை என்பதனை இந்த நிகழ்வு எமக்கு கோடிட்டு காட்டி உள்ளது. இது தமிழர்களின் வாழ்வின் விழுமியங்களில் ஒன்றாக மாறிவிட்டது. இனி வரும் காலங்களில் இதனை எந்த அடக்கு முறையாலும் ஒடுக்கிவிட முடியாது என்பதை மக்கள் நிருபித்து காட்டி உள்ளனர்.

**கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சல் தரை விவகாரம் மோசமடைந்து செல்கின்றது. 3 மாத காலமாக அங்கு போராட்டம் நடைபெறுகின்றது. இதன் தற்போதைய நிலை என்ன?**

எந்த வித முன்னேற்றமும் இல்லை. அண்மையில் சட்டவிரோதமாக அத்து மீறி மேய்ச்சல் நிலத்தில் தொழில் செய்யும் வேறு மாவட்ட சிங்கள மக்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் வெளியேறவில்லை தொடர்ச்சியாக அவர்கள் தொழில் செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு காவல் துறையினர் பாதுகாப்பு வழங்கி வருகிறார்கள்.

இதுதான் இந்த நாட்டின் சட்ட ஒழுங்கு. சட்டம் எதை சொன்னாலும் பெரும்பான்மை இனத்திற்கு ஒரு நீதியும் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு நீதியுமாக பிரித்தாளப்படுகின்றது. இங்கு சட்ட ஒழுங்கு என்பது பெரும்பான்மை இனத்தவருக்கு ஒரு சட்டம், சிறுபான்மை கொண்ட தமிழ் மக்களுக்கு ஒரு சட்டம் என்றுதான் இங்கு சட்ட ஒழுங்கு காணப்படுகிறது.

அது மாத்திரமல்ல 2019 கொழும்பு நீதி மன்றத்தால்ஒருதீர்ப்பும்வழங்கப்பட்டது. மகாவலி அதிகார சபை ஊடாக மேற்கொள்ளப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் உடனடியாக அங்குள்ள நபர்களை வெளியேற உத்தரவு பிறப்பித்து இருந்தது. அதன் அடிப்படையில் அங்கிருந்து புத்தர் சிலை, சட்டவிரோதமாக பயிர் செய்தவர்கள் வெளியேறி இருந்தனர்.

அதன் பிறகு வந்த ஆட்சியாளர்கள் ஆதரவுடன் தற்போது 400 க்கும் மேற்பட்ட நபர்கள் அத்து மீறி கால் நடைகள் மேய்ந்த நிலத்தை உழுது பயிர் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். கால் நடைகள் இதுவரை காலம் மேய்ந்த புல் தரை நிலங்களுக்கு செல்லும் போது, அங்கே துப்பாக்கிச் சூடு சூடு,மின் தாக்குதல்,வாய் வெடி, வாழ்வெட்டு என பல வகைகளில் பசுக்கள் கொல்லப்படுகின்றன.

2013 காலப் பகுதிக்கு பின்னர் இதுவரை 5000க்கு மேற்பட்ட கால் நடைகள் கொல்லப்பட்டுள்ளன. அந்தவகையில் கால் நடை வளர்ப்பாளர்கள் 84ஆவது நாளாக சித்தாண்டி பிரதான வீதியில் தங்களது மேய்ச்சல் நிலத்தை விடுமாறு கூறி போராட்டம் நடாத்தி வருகிறார்கள். ஆனாலும் எந்தவிதமான தீர்வும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி கூட உயர் மட்ட குழுவை அழைத்து அந்த இடத்தில் விவசாயம் செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டாமென உத்தரவு வழங்கி இருந்தார். இதேபோல் சில நீதி மன்றங்களும் உத்தரவு வழங்கி இருந்தது. ஆனால் காவல் துறையினர் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு செயற்படுவது போல் உள்ளனர். ஆனால் தொடர்ச்சியாக கால்நடை வளர்ப்பாளர்கள் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து கொண்டு செல்லுகின்றனர். இன்றுடன் 4 மாதங்களுக்கு மேல் அவர்கள் பால் உற்பத்தியில் ஈடுபடாமல், நான்கு மாதமாக வாழ்வாதாரம் இழந்து இன்று வீதியில் போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.

**இந்த நிலையில், தமிழ் பண்ணையாளர்களின் வாழ்வாதார நிலை எவ்வாறானதாக இருக்கின்றது?**

நிச்சயமாக நான் அவர்களை நேரடியாக தொடர்ச்சியாக சந்தித்து வருகின்றேன்.

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்

# கால் நடை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு என்ன???

ஹஸ்பர் ஏ ஹலீம்

நாட்டின் தேசிய உற்பத்தியில் பால் உற்பத்தி என்பதும் பாரிய பங்கு வகிக்கின்றது இதன் மூலமாக இதனை பெற வேண்டுமாக இருந்தால் கால்நடை வளர்ப்பான பசு மாடு போன்றவற்றை வளர்ப்பில் ஈடுபடுத்தவும் அதனை பாதுகாக்கவும் முயற்சிக்க வேண்டும். திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதியானது ஒரு விவசாய பூமியாகவும் கால் நடை வளர்ப்பின் மூலமாக வருமானங்களை ஈட்டக்கூடிய பால் உற்பத்தி மூலமான தயிர்,பால் விற்பனையும் இடம் பெற்று வரும் ஒரு பிரதேசமாக காணப்படுகிறது.



கால்நடை வளர்ப்பாளர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவருகின்ற தம்பலகாமம் பகுதியைச் சேர்ந்த பண்ணையாளர்கள் கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரை இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றார்கள்.

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் பதிவு செய்யப்பட்ட 45க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுவரும் நிலையில் அவர்கள் தங்கள் கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரை இன்றி பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். கோடைகால சிறுபோக செய்கையின்போது நெற் செய்கை மேற்கொள்ளப்படாத தம்பலகாமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வைத்து தமது கால்நடைகளை பராமரித்து வருகின்ற போதும் பெரும்போக நெற்செய்கை மேற்கொள் ளப்படுகின்ற காலப்பகுதிகளில் தங்கள் கால் நடைகளை வைத்து பராமரிப்பதில் பல சிர மங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். இதனால் பெரும்பாலான பண்ணையாளர்கள் கால்நடை வளர்ப்பினை கைவிட்டு வருவதாகவும் தெரிவிக் கின்றார்கள்.

பெரும்போக நெற்செய்கை மேற் கொள்ளப்படுகின்ற நவம்பர் மாதம் தொடக் கம் தைப்பொங்கல் வரையான 75 நாட் களுக்கு தம்பலகாமத்தில் இருந்து 58 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மொரவெவ குளத்தை அண்மித்துள்ள பகுதியில் சிலர் தமது கால்நடைகளை வைத்து பராமரித்து வருகின்றனர். இவர்களில் தம்பலகாமத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லீம் பண்ணையாளர்கள் 20 பேரும், மொரவெவ பகுதியைச் சேர்ந்த ஒரு பண்ணையாளரும் ஈடுபட்டு வருகின்றார்கள்.

எனவே கால்நடைகளுக்கான நிரந்தரமான மேய்ச்சல் தரையை வழங்குமாறும் இல்லாவிடில் பெரும்போக செய்கையின்போது கால்நடைகளின் மேய்ச்சலுக்காக தற்காலிக இடங்களையாவது வழங்குமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்ற னர்.



நாட்டின் ஜனாதிபதி உள்நாட்டு உற்பத்தி களை ஊக்குவிக்குமாறும் கால்நடைகளின் உற் பத்திகளை அதிகரிக்குமாறு கூறிவருகின்ற போதும் கால்நடை வளர்ப்பிற்கான மேய்ச்சல் தரைகள் பண் ணையாளர்களுக்கு வழங்கப்படவில்லை. யுத்தம் முடிவுற்ற காலத்தின் பின்னர் வனஜீவி மற்றும் வனவளத்துறை திணைக்களினால் பெரும்பாலான மேய்ச்சல்தரைகள் கையகப்படுத்தப்பட்டு இன் னும் விடுவிக்கப்படாமல் உள்ளது. பல முறை கோரிக்கை விடுக்கப்பட்டும் அது விடுவிக்கப்படாமையினால் பெரும்பாலான பண்ணையாளர்கள் தங்கள் கால்நடைகளை விற்று வருகின்றார்கள்.

1983ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடவான பகுதியில் கால்நடை வளர்ப்புக்காக 1500 ஏக்கர் மேய்ச்சல் தரை நிலம் வழங்கப்பட்டிருந்ததுடன் அப்பகுதியில் 60 பேருக்கான உறுதிக்காணி 120 ஏக்கரும் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவையும் தற்போது வனஜீவி மற்றும் வனவள பாதுகாப்புத் திணைக்களங்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர் கள் குறிப்பிடுகின்றார்கள். இவ்வாறான நிலை தொடருமானால் தாமும் கால்நடை வளர்ப்பை கைவிடவுள்ளதாகவும் தெரிவிக்கின்றார்கள்.

கால் நடை வளர்ப்பாளர்கள் மேய்ச்சல் தரையின்றி பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமானால் கால் நடைகளை முறையாக வளர்ப்பதன் ஊடாக உற்பத்திகளை அதிகரிக்கலாம் தம்பலகாமம் பிரதேச செயலக பகுதியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கால் நடை வளர்ப்பான பசு மாடுகள் அரச சார்பற்ற நிறுவ னம் ஊடாக அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக வழங்கப்பட்டிருந்தன. ஆனால் முறையான தீர்வில்லாமல் மேய்ச்சல் தரையின்றிய நிலையில் வாழ்கின்றனர்.

கால் நடை வளர்ப்பாளர் ஒருவர் தம்பல காமம் பாலம்போட்டாறு ஊத்தை வாய்க்கால் ஆற்றுப்பகுதியில் கால் நடை மேய்ச்சலின் போது முதலைத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந் துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் அதே பகுதியை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான கே.சசிகுமார் வயது (36) என்பவரே இவ்வாறு பலியானார்.



இவ்வாறாக இதே பகுதியில் தங்களது மாடு களை மேய்ச்சலின் போதும் முதலை கொண்டு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். அன்றாட ஜீவனாம்சமாக காணப்படும் இக் குடும் பத்தின் எதிர்கால நிலை தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது. இருந்த போதிலும் உயிரிழந் தவருக்காக பத்து இலட்சம் அரசாங்கம் மூல மாக வழங்கப்படவுள்ள நிலையில் அதன் முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபாவுக்கான காசோலை 2023.12.04 ந் திகதி தம்பலகாமம் பிரதேச செயலகத்தில்வைத்துஉயிரிழந்தவரின்மனைவிக்கு வழங்கப்பட்டது. இதனை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ,பிரதேச செயலாளர் உள்ளிட்ட குழுவினர் வழங்கினர். மேய்ச்சல் தரை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் தம்பலகாமம் பண்ணையாளர்களுடனான கலந்துரையாடலும் பிரதேச செயலக மண்டபத்தில் 04.12.2023 இடம் பெற்றது. பண்ணையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள் தொடர்பில் மாவட்ட செயலாளரிடம் எடுத்துரைத்தனர்.

பண்ணையாளர்களுக்கான மேய்ச்சல் தரை வழங்கப்பட்டு அவர்களது வாழ்வாதாரமான பால் உற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் நல்லதொரு வருமானத்தை ஈட்ட வேண்டும் என்பதை எதிர் பார்ப்பாக கொள்கின்றனர்.

• • •

## பொருளாதார ... தொடர்ச்சி ...

இதனிடையே, இலங்கையினை பொரு ளாதார வீழ்ச்சியில் இருந்து காப்பாற்றிய மிகப் பெரும் பொறுப்பு இந்தியாவுக்கே சாரும் என கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அனைத்துலக நாணயநிதியத்திற்கு உறுதி மொழிகளை வழங்கி, மிகப்பெரும் தனியார் கடன் கொடுக்கும் அமைப்பான பரீஸ்கிளப் எனப்படும் அமைப்புடன் யப்பானை இணைத்து இலங்கையை இந்த வீழ்ச்சியில் இருந்து இந்தியா காப்பாற்றியிருந்தது.

## விண்வெளிக்கு ... தொடர்ச்சி ...

இதனிடையே மனிதர்களை விண் வெளிக்கு அனுப்புவதே தமது நீண்டகாலத் திட் டம் என ஈரானின் அதிபர் தெரிவித்துள்ளார். கடந்த செப்ரம்பர் மாதம் பூமியில் இருந்து 450 கி.மீ தொலைவில் தகவல்தொழில்நுட்ப செய் மதியை ஈரான் வெற்றிகரமாக ஏவியிருந்தது.

இந்த முயற்சிக்கு 2022 ஆம் ஆண்டு ரஸ்யா தொழில்நுட்ப உதவிகளை வழங்கியிருந்தது.

## இலங்கைக்கும்... தொடர்ச்சி ...

தொடர்பில் ஆய்வு செய்து ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை மேம்படுத்துவது தொடர்பில் ஆய்வு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் வளைய கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இலங்கை எடுத்துள்ள நிலையில் அமைச்சர்களின் கூட்டத்தில் இலங்கை முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என பம்பலொனி தெரிவித்துள்ளார்.

## ரணில் - உலக ... தொடர்ச்சி ...

ஏற்படுத்துதல், கடந்தகால தவறுகளில் இருந்து பாடம் கற்றல், நீதியை நிலைநாட்டுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் கூட்டாக அறிவித்தல் விடுக்கப்பட்டதாக இலங்கை அதிபர் மாளிகை தெரிவித்துள்ளது.

புலம்பெயர் அமைப்புக்களில் ஒரு பிரிவினரும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் புதுடில்லி சென்று இந்திய அதிகாரிகளை சந்தித்துவரும் நிலையில் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

# பண்ணையாளர்களுக்கு ஆதரவாக இணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்

மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்ட கால்நடை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைக்கான போராட்டம் 87நாட்களையும் கடந்துசென்றுகொண்டிருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட மயிலத்தமடு,மாதவனையில் கால்நடை பண்ணையாளர்கள் காலம்காலமாக தமது கால்நடைகளை கொண்டு பராமரித்த பகுதியை தெற்கினை சேர்ந்த குடியேற்றவாசிகள் அத்துமீறி அபகரித்து அங்கு விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



இந்த நிலையில் தமது கால்நடைகளை பராமரிக்கும் பகுதியை மீட்டுத்தந்து தமது கால்நடைகளை அச்சமின்றி பராமரிக்க நடவடிக்கையெடுக்குமாறு மட்டக்களப்பில் தொடர்ந்து பண்ணையாளர்கள் போராடிவருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இந்த போராட்டத்தினை கால்நடை பண்ணையாளர்கள் மட்டுமே முன்னெடுத்துவரும் நிலையில் அவர்களுக்கான ஆதரவுதளங்கள் என்பது மறைந்துசெல்வதை காணமுடிகின்றது.

இவ்வாறான நிலையில் மயிலத்தமடு, மாதவனை தொடர்பில் தவறான விடயங்களும் பரப்பப்பட்டு வருகின்ற நிலையில் இந்த போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்படாமல் போராட்டம் பண்ணையாளர்களின் போராட்டமாக மட்டும் முன்னெடுக்கப்படுவதானது எந்தளவுக்கு வெற்றியளிக்கும் என்பதே கேள்வியாகவுள்ளது.



எவ்வாறாயினும் மயிலத்த மடு, மாதவனையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் என்பது வெறுமனே நாங்கள் பண்ணையாளர்களின் போராட்டமாக கடந்துசெல்வது என்பது கிழக்கு மாகாணத்தின் இருப்பிற்கும் தமிழ் தேசியத்திற்குமான ஆபத்தாகவே அது அமையும்.

அண்மையில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் அவர்கள் ஊடக நேர்காணல் ஒன்றில் தெரிவித்த கருத்துகள் பண்ணையாளர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது குறித்த பகுதியில் திவிலப் பொத்தானை என்ற கிராமம் யுத்தத்திற்கு முன்பாக இருந்ததாகவும் அங்கு சிங்கள குடும்பங்கள் வசித்ததாகவும் பின்னர் யுத்தத்தின்போது அவர்கள் இடம்பெயர்ந்து சென்று யுத்தம் நிறைவுபெற்ற பின்னர் மீண்டும் அதிகளவானோர் குடியேறவந்த நிலையிலேயே இந்த பிரச்சினை ஏற்பட்டதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

எனினும் இந்த கருத்துகளை முற்றாக மறுத்துள்ள பண்ணையாளர்கள் திவிலப்பொத்தானை என்ற கிராமம் மயிலத்தமடு,மாதவனைக்கு அருகில் உள்ளதாகவும் அங்கு சிங்கள மக்கள் வசித்துவரும் நிலையில் இப்பகுதியில் திவிலப்பொத்தானைக்கு எந்த தொடர்பும் இல்லையெனவும் தெரிவிக்கின்றனர்.அத்துடன் திவிலப்பொத்தானை என்ற கிராமம் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் இல்லையெனவும் அவ்வாறான நிலையில் கிழக்கு மாகாண ஆளுனர் தெரிவித்த விடயம் முற்றிலும் உண்மைக்கு புறம்பானது எனவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.




மயிலத்தமடு,மாதவனைக்கு அருகில் திவிலப்பொத்தனை என்ற கிராமம் இருக்கின்றது அங்கு சிங்கள மக்கள் வசிக்கின்றார்கள். அவர்களுக்கும் இங்கிருக்கின்ற சிங்கள அத்துமீறிய குடியேற்றக்காரர்களுக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லையெனவும் மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் அவ்வாறான கிராமம் ஒன்று இருந்ததற்கான எந்தவித தடயங்களும் இல்லாத நிலையில் தெற்கில் இனவாத அரசியல்வாதிகள் பரப்பிவரும் போலி கருத்துகள் போன்று கிழக்கில் உள்ள ஆளுனர் தெரிவித்துள்ள கருத்தும் உள்ளதாகவும் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனர் அனுராதா ஜகம்பத் குறித்த பகுதியில் சட்ட விரோத குடியேற்றவாசிகளைக் கொண்டுவந்து அவர்களைக் குடியேற்றுவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்ட நிலையில் அதற்கு எதிரான பலமான எதிர்ப்பினை மட்டக்களப்பு மக்கள் வெளிப்படுத்தினார்கள்.2012ஆம் ஆண்டு மயிலத்தமடு,மாதவனை பகுதியில் அத்துமீறிய குடியேற்றம் செய்யப்பட்டபோது அன்றைய கிழக்கு மாகாண விவசாய அமைச்சராகவிருந்த கி.துரைராஜசிங்கம் அவர்கள் மகாவலி அதிகாரசபையின் ஊடாக நடவடிக்கையெடுத்து அங்கிருந்த சட்ட விரோதகுடியேற்றக்காரர்களை வெளியேற்றும் செயற்பாடுகளை முன்னெடுத்த நிலையில் இன்றைய கிழக்கு மாகாண ஆளுனரின் கருத்துகள் என்பது பல்வேறு கேள்விகளை ஏற்படுத்தி நிற்கின்றது.




முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனரின் கருத்தினை ஒத்ததாக தற்போதைய ஆளுனர் தெரிவித்த கருத்துகளும் உள்ளதன் காரணமாக பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் மட்டக்களப்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் மயிலத்தடு பண்ணையாளர்களின் பிரச்சினை குறித்து ஊடகவியலாளர் கேள்வியெழுப்பியபோது அது தொடர்பில் பதிலளிப்பதிலிருந்து அவர் நழுவிச்சென்ற விடயம் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

அதுவும் ஒரு தமிழ் கட்சியின் தலைவர், தமிழ் ஆளுநராகவிருந்து கொண்டு நேர்மையற்ற சிங்கள கடும்போக்கு அரசியல்வாதிகள் முன்னெடுத்துவரும் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவது போன்ற கருத்துகளை தெரிவிப்பது என்பது அவரும் சிங்கள தேசியவாதததின் எடுபிடியாகவே உள்ளார் என்பதை நிரூபித்துள்ளது.

இவ்வாறான நிலையில் மயிலத்தமடு, மாதவனை பகுதியில் தொடர்ச்சியாக கால்நடை பண்ணையாளர்களின் கால்நடைகள் மீது சிங்கள இனவெறியர்களினால் தொடர்தாக்குதல்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. தாங்கள் போராட்டம் நடாத்தி 87 நாட்களை கடந்துள்ள நிலையில் இதுவரையில் 80க்கும் மேற்பட்ட பசுக்களை இழந்துள்ளதாக மயிலத்தமடு, மாதவனை கால்நடை பண்ணையாளர்கள் சங்கத்தின் தலைவர் சி.நிமலன் தெரிவித்தார். நீதிமன்ற கட்டளையொன்று சட்ட விரோத குடியேற்றக்காரர்களை அகற்றுமாறு வழங்கப்பட்டுள்ளபோதிலும் அந்த கட்டளையினை நடைமுறைப்படுத்த காவல்துறையினரும் அதிகாரிகளும் நடவடிக்கையெடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

“சட்ட விரோத குடியேற்றக்காரர்களை கட்டுப்படுத்தவும் பண்ணையாளர்களை பாதுகாப்பதற்காகவும் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணில் உள்ளோர் அங்குள்ள சட்ட விரோத குடியேற்றக்காரர்களை பாதுகாக்கும் செயற்பாடுகளையே முன்னெடுக்கின்றனர்.



கால்நடைகள் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுகின்றபோதிலும் குறித்த தாக்குதல்களை நடத்துவோர் குறித்து அங்கு அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணுக்கு சென்றுமுறைப்பாடுகளை செய்தால் தமது முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்வதில்லையெனவும் கரடியனாறு பொலிஸ் நிலையத்திற்கு வந்துமுறைப்பாடுகளை செய்தால் பொலிஸார் வந்துபார்த்துவிட்டு செல்கின்றார்களே தவிர தாக்குதல் நடாத்துவோருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதன் காரணமாக அவர்கள் பொருளாதார ரீதியாக கடும் பாதிப்புகளை எதிர்நோக்குவதன் காரணமாக அவர்கள் உளப்பாதிப்புகளுக்கு ஆளாகும் நிலை யேற்பட்டுள்ளதாகவும் பண்ணையாளர்கள் தலைவர் நிமலன் தெரிவிக்கின்றார்.

அவ்வாறானால் இவர்களின் இந்த பிரச்சினைக்கான தீர்வினை வழங்குவது யார் என்ற கேள்வி எழுகின்றது.அண்மையில் குறித்த பண்ணையாளர்களின் போராட்ட இடத்திற்கு

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# விடுதலை வேட்கையுடன் திரளும் தமிழர்கள்

தமிழர்கள் சில விடயங்களைப் பற்றிப் பிடித்துக்கொண்டால், அவற்றை எவ் வழியிலும் நீக்கஞ்செய்ய முடியாது. அதற்கு மாவீரர் நாள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆம், தமிழ் தேசிய எழுச்சி நாளான மாவீரர் நாள் பேரெழுச்சியுடன் நிறைவடைந்திருக்கின்றது. கடந்த வருடத்தை விடவும் இவ்வருடம் மாவீரர் தினத்திற்காக திரண்ட மக்கள் தொகை மிக அதிகம். குடும்பம்குடும்பமாகக் குழுமி வந்து மாவீரர் துயிலுமில்லங்களை மக்கள் முழுமைப்படுத்தினர். மிகுந்த உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர். வழமையான துயிலுமில்லங்களுக்கு அப்பால், தமிழீழ விடுதலைப்புலிகள் மாவீரர்கள் நினைவாக எங்கெல்லாம் நினைவுத் தூபிகளை அமைந்திருந்தார்களோ, அவ்விடங்களையெல்லாம் சீரமைத்து, அங்கேயும் வணக்க நிகழ்வுகள் இடம்பெற்றன. இதற்கு சற்றும் சளைக்காத வகையில் இலங்கை அரச படைகளும், பொலிஸாரும், புலனாய்வாளர்களும் களத்தில் செயற்பட்டனர். மாவீரர் வாரம் தொடங்கிய நாள் தொட்டே கண்காணிப்புகளும், விசாரணைகளும், கைதுகளும், மாவீரர் துயிலுமில்ல சிதைப்புக்களும் ஆரம்பமாகியிருந்தன.

### வழக்குகள்

மாவீரர் வாரமானது நவம்பர் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் முன்னரே, பொலிஸார் நீதிமன்றங்களை நாடியிருந்தனர். அதாவது பயங்கரவாதிகளை நினைவுகூர சட்டத்தில் இடமில்லை என்றவாறான வாதங்களை முன்வைத்து வழக்குகளைத் தொடர்ந்தனர். வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பாலான நீதிமன்றங்கள் நினைவேந்தல் உரிமையை சுட்டிக்காட்டி, பொலிஸார் தொடர்ந்த



வழக்குகளைத் தள்ளுபடி செய்துவிட்டன. முல்லைத்தீவில் இரவில் கூட பொலிஸார் நீதிமன்றத்தை நாடியிருந்தனர். அப்போதும் நீதிமன்றம் பகலில் சொன்னதையே சொன்னது. எனவே புலிகளின் அடையாளங்களை வைத்து நினைவேந்தல் செய்ய முடியாது என்கிற கோசத்தோடு மாவீரர் துயிலுமில்லங்களுக்கு வந்தனர் பொலிஸார். அதன்படி சிவப்பு, மஞ்சள் கொடிகள், கார்த்திகைப் பூ போன்றனவெல்லாம் பயங்கவார அடையாளங்களாகப் பொலிஸாரின் கண்களுக்கு மாறியிருந்தன. முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்துக்கு வருகைதந்த பொலிஸார், அங்கு வரையப்பட்டிருந்த கார்த்திகைப் பூ பயங்கரவாதம் எனத் தெரிவித்து முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுடன் மணிக்கணக்கில் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ரவிகரன் அவ்வாறு பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமைக்காக அன்றைய தினம் மாலை 3 மணிநேரம் தனியாக அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார். அதேபோல மாவீரர் தினத்தன்று, அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்திற்குள் நுழைந்த பொலிஸார் அங்கு கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை அறுத்தெறிந்தனர்.

### மாவீரர் துயிலுமில்ல சிதைப்புகள்

வழக்குகளில் தோற்றுப்போன பொலிஸாரும், புலனாய்வாளர்களும் தங்களின் வழமையான வேலைகளில் இறங்கினர். நேரடியாகவும், மறைமுகமாகவும் மாவீரர் துயிலுமில்லங்கள், நினைவிடங்களை சிதைக்கும் கைங்கரியத்தைக் கையிலெடுத்தனர்.



**ஜெயராஜா துரைராஜா**

இறுதிப் போர்வேளையில் வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களுக்கான துயிலுமில்லமொன்று முல்லைத்தீவின், தேவிபுரம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது. அதனை நினைவு வைத்திருந்த மக்கள் இம்முறை அவ்விடத்தில் தற்காலிக நினைவுத் தூபியொன்றினை அமைத்து நினைவேந்தலை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். அதன்படி மாவீரர் வாரம் ஆரம்பித்தவுடன் 21 ஆம் திகதி காலை சிரமதானம் மூலம் அப்பகுதியை சீர்படுத்தி, தற்காலிக தூபியொன்றை அமைத்தனர். அன்றிரவு அவ்விடத்திற்கு வருகைதந்த இனந்தெரியாத நபர்கள் நினைவுத்தூபியை அடித்து நொருக்கிச் சென்றனர்.

23 ஆம் திகதி மட்டக்களப்பின் வாழைச்சேனை பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுத்தூபியைப் பலரும் பார்த்திருக்க பொலிஸார் அடித்து நொருக்கினர். பழைய துயிலுமில்லத்தை இராணுவம் ஏற்கனவே அழித்திருந்தது. அவ்வாறு அழிக்கப்பட்டவையிலிருந்து எஞ்சிய கற்களைக் கொண்டு மீண்டும் அமைக்கப்பட்ட நினைவுத்தூபியைப் பொலிஸார் அழித்தனர்.

கிழக்கு மாகாணத்தின் பெரிய துயிலுமில்லங்களின் ஒன்றாக வாகரை துயிலுமில்லத்தை பிரதேச மக்கள் சீரமைத்த பின்னர் அப்பகுதிக்குள் நுழைந்த பொலிஸார் அதனை உடைத்தெறிந்தனர். அதனைத் தடுக்க முனைந்த மக்களை அச்சுறுத்திச்சென்றனர்.

### விசாரணைகள்

அதேபோல வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியில் துயிலுமில்ல சிரமதான பணியில் ஈடுபட்டிருந்தவர்களை பொலிஸார் புகைப்படமெடுத்து கண்காணித்ததோடு, அவ்விடத்தில் நின்ற பொதுமக்கள் நால்வரின் தனிப்பட்ட விபரங்களையும் பெற்றுச்சென்றனர்.

மட்டக்களப்பின் தாண்டியடி மாவீரர் துயிலுமில்ல பகுதியில் இடம்பெற்ற மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வொன்றுக்குள் நுழைந்த பொலிஸார், அந்நிகழ்வை குழப்பும் வகையில் விசாரணைகளில் ஈடுபட்டதோடு, நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

கைதுகள்

அதேபோல மட்டக்களப்பின் வெள்ளாவெளி பகுதியில் மாவீரர் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்றினை நடத்திக் கொண்டிருந்த ஜனநாயக மக்கள் கட்சியின் தலைவர் என்.நகுலேஸ் நிகழ்ச்சியின் இடையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார்.

மாவீரர் தின ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் க.குகானந்தராசா தாண்டியடி துயிலுமில்லப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அம்பாறை, கஞ்சிகுடிச்சாறு பகுதியில் உள்ள துயிலுமில்லத்தை சீர்ப்படுத்தச் சென்ற 35 இற்கும் மேற்பட்டவர்கள் தடுத்துவைக்கப்பட்டதோடு, அவர்களைப் பார்வையிடச் சென்ற தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பொலிஸாரினார் திருப்பியனுப்பப்பட்டார்.

மட்டக்களப்பின் தரவை துயிலுமில்லத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் அப்பகுதிக்குள் நுழைந்த பொலிஸார் அங்கு கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை அறுத்து வீசினர். தொடர்ந்து அங்கு நின்றிருந்த 07 பேரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். அதில் ஒருவர் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் ஆவார். இன்னமும் விடுதலை செய்யப்படாது தடுத்துவைக்கப்பட்டிருக்கும் இவர்களை எதிர்வரும் இருதினங்களுக்குள் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில், விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்கள் எனக்கோரி ஒரு தொகையினரின் படங்களை வைத்துக் கண்காட்சி நடத்திக்கொண்டிருந்தவர்களை யாரென விசாரித்த குற்றத்திற்காக முன்னாள் போராளியும், அரசியல் கைதியுமான அரவிந்தன் கைதுசெய்யப்பட்டு இரு தினங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

### மாவீரர் தினத்துக்குப் பின்னரான கைதுகள்

யாழ்ப்பாணத்தில், மாவீரர் தினத்தன்று, தனது ஆடையில் விடுதலைப்புலிகளின் இலச்சினையையும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் படத்தையும் அச்சேற்றி அணிந்தமைக்கான இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.




அதேபோல கோப்பாய்துயிலுமில்லத்திற்கு தம் பிள்ளைகளுக்கு பெண் போராளிகளைப்போல வேடமணிந்து அழைத்து வந்த பெற்றோர் குறித்த விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவர்களையும் கைதுசெய்ய வேண்டும் என சிங்கள கடும்போக்காளர்களும், சிங்கள ஊடகங்களும் எழுதிவருகின்றன.

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# பயிரை மேயும் வேலிகள்

துரைசாமி நடராஜா

பெருந்தோட்ட மக்கள் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை பெற்ற சமூகமாக மாற்றம்பெற வேண்டும் என்ற கருத்து வெளிப்பாடுகள் தொடர்ச்சியாகவே இருந்து வருகின்றன. எனினும் இது குறித்த சாதக விளைவுகள் இன்னும் ஏற்படாத நிலையில் தொடர்ந்தும் இம்மக்கள் புறக்கணிக்கப்பட்ட ஒரு நிலையிலேயே இருந்து வருகின்றமை வருந்தத்தக்க விடயமாகும். இந்நிலையில் பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள இச் சந்தர்ப்பத்தில் இனியேனும் இவர்களின் காணி யுரிமை மற்றும் வீட்டுரிமை கனவு நனவாக வேண்டும் என்பதே பலரினதும் எதிர்பார்ப் பாகும்.



பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வருகைதந்த காலம் முதல் பல்வேறு துன்ப துயரங்களையும் அனுபவித்துள்ளமை தெரிந்த விடயமாகும். இந்நிலை தற்போதும் பாரியளவில் மாற்றம் பெற்றதாக இல்லை. அராஜக ஆட்சியாளர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இன்னும் இம்மக்கள் மீதான நெருக்கீடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இதன் தாக்கம் சகல துறைகளிலும் எதிரொலிக்கும் நிலையில் இதிலிருந்தும் மீள்வதற்கு வழிவகைகள் குறைவாகவே காணப்படுகின்றன.' வேலியே பயிரை மேய்ந்தாற்போல ' இச்சமூகத்தை சேர்ந்த சிலரே இம்மக்களின் பின்னடைவிற்கு காரணகர்த்தாவாக இருந்து வருவதாகவும் பல்வேறு விமர்சனங்கள் இருந்து வருகின்றன.

இதேவேளை ஒரு சமூகம் மேலெழும் புவதற்கு அச்சமூகத்தைச் சார்ந்த புத்திஜீவிகளின் வகிபாகம் அவசியமாக தேவைப்படுகின்றது. இந்நிலையில் மலையக சமூகத்தில் இருந்து மேலெழும்பிய புத்திஜீவிகள் இச்சமூகத்தின் மேம்பாட்டிற்கு காத்திரமான பங்களிப்பினை வழங்காமல் தானுண்டு தனது வேலையுண்டு என்று ஒதுங்கி வாழ்வதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் உண்மை இல்லாமலும் இல்லை. சுயநலத்திற்கு அப்பால் சமூகத்தை மேம்படுத்தும் பொதுநல சிந்தனை களையும் புத்திஜீவிகள் உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.




காணியுரிமை மற்றும் வீட்டுரிமை என்பன ஒரு சமூகத்தின் அபிவிருத்திக்கு உந்துசக்தியாக அமைகின்றன. எனினும் மலையக பெருந் தோட்ட சமூகத்தைப் பொறுத்தவரையில் இவை இரண்டுமே தொடர்ச்சியாக மறுக்கப்பட்ட ஒரு விடயமாகவே இருந்து வருகின்றது. தேர்தல் விஞ்ஞாபனத்திலும் வரவு செலவு திட்ட முன் மொழிவுகளிலும் மலையக மக்களின் காணி யுரிமை மற்றும் வீட்டுரிமை தொடர்பில் அதிக மான விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

எனினும் இவற்றின் நடைமுறைச் சாத்தியப்பாடுகள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. தேர்தலில் வெற்றி பெற்ற கையோடு அல்லது வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டதன்பின்னர்வலியுறுத்தல்கள் அனைத்தும் மறக்கப்பட்டு விடுகின்றன என்பது கடந்தகால வரலாறாகும். இதன் தொடர்ச்சி இன்னும் நீங்கியதாக இல்லை. பெருந்தோட்ட மக்களுக்கு காணியுரிமையை வழங்கி தேசிய நீரோட்டத்தில் அவர்களை இணைத்துக் கொள்ள வேண்டிய தேவையுள்ளபோதும் இதற்கான முன்னெடுப்புக்கள் காத்திரமானதாக இல்லை. காணிகளை கொடுப்பதற்கு பதிலாக பறித்தெடுக்கும் நடவடிக்கைகளையே இனவாத சிந்தனையாளர்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

### காணிச் சீர்திருத்தச் சட்டம்

1972 ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட காணி உச்சவரம்பு சட்டம் இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினருக்கு ஒரு பேரிடியாக அமைந் தது. இவ்வாண்டில் கொண்டு வரப்பட்ட காணி உச்சவரம்பு சட்டமும், தொடர்ச்சியான நடவடிக்கைகளும் தேயிலைக் காணிகளின் உடைமையில் பாரிய மாற்றங்கள் ஏற்படுவதற்கு உந்துசக்தியாக அமைந்தன. 1972 முதல் அமுல் படுத்தப்பட்ட காணி உச்சவரம்பு சட்டத்திற் கேற்ப, நெற்செய்கை மேற்கொள்ளப் படும் நிலங்களாயின் 10 ஹெக்டேயருக்கு மேற் பட்ட தனியுடைமைகளும், பெருந் தோட்டப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் நிலங்களா யின் 20 ஹெக்டேயருக்கு மேற்பட்ட தனியார் உடைமைகளும் சுவீகரிக்கப்பட்டன. இதற்கேற்ப 1972 இல் பெருந்தோட்டக் காணிகளில் சிறிய பகுதியினை மட்டுமே சுவீகரித்த நிலையில்,1975 ம் ஆண்டு காணிச் சீர்திருத்த நடவடிக்கையின் இரண்டாவது கட்டத்திலேயே அதிகளவான பெருந்தோட்டக் காணிகள் சுவீகரிக்கப் பட்ட தனை அறிந்த கொள்ளக் கூடியதாக உள்ளது.




1980 இல் பயனற்ற தேயிலைக் காணி கள் என்றுஅடையாளப் படுத்தப்பட்டு பத்தாயி ரம் ஹெக்டேயர் காணிகள் கம்பளை, கண்டி, உலப்பனை கடுகண்ணாவ பகுதிகளில் சுவீகரிக் கப்பட்டன. இக்காணிகளில் மாற்றுப்பயிர் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்ட நிலையில் உலக வங்கியும் இதற்கென அனுசரணையாக இருந்தது. எனினும் இக்காணிகள் பின்னர் காணியற்ற பெரும்பான்மை கிராமிய மக்களுக்கே பகிர்ந் தளிக்கப்பட்டன. இதுபோல இன்னும் பல உதாரணங்களையும் எம்மால் குறிப்பிட்டுக் கூற முடியும்.

சமகாலத்தில் கூட பெருந்தோட்டக் காணிகள் அபிவிருத்தி என்னும் போர்வையில் சுவீகரிக்கப்பட்டு இங்குள்ள மக்களின் இருப்பு சிதைக்கப்படுவதைக் காண்கிறோம். இதே வேளை பெருந்தோட்டத் துறையில் உள்ள அரச தோட்டக் காணிகளை எந்தவித திட்டமிடலும் இல்லாமல் கூறுபோட்டு விற்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்திருக்கின்றார். இதேவேளை அங்கிருக்கின்ற ஓய்வு பெற்றுள்ள தொழிலாளர்களின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதியம் போன்ற கொடுப்பனவுகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் எடுப்பதாகத் தெரியவில்லை என்றும் வேலுகுமார் குற்றம் சுமத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

பெருந்தோட்டத்துறையின் தேயிலை விளை நிலங்கள் திட்டமிட்டு சுவீகரிக்கப்படும் நிலையில் தொழிலாளர்களின் காணிப்பிரச்சினை யானது மென்மேலும் தொடர்ந்து கொண்டிருக் கின்றது. இந்நிலையில் கம்பனியினர் முன் வைக்கின்ற வெளியார் உற்பத்தி முறையானது தொழிலாளர்கள் காணியுரிமையைப் பெற்றுக் கொள்ள முதற்படியாகவும் வாய்ப்பாகவும் அமையும் என்று புத்திஜீவிகள் வலியுறுத்தியுள் ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

### சமூக நிறுவனம்

இதேவேளை பெருந்தோட்ட மக்களின் வீட்டு ரிமை தொடர்பில் நோக்குகையில் இந்தக் கனவு இன்னும் நிறைவேறாத ஒன்றாகவே இருந்து வருகின்றமை தெரிந்ததேயாகும். லயத்து வாழ்க்கை இம்மக்களைப் பொறுத்தவரையில் ஒருசிறைவாசமேயாகும் என்பதையும் மறுப்பதற் கில்லை.' வீடு என்பது தனியே வெயிலுக்கும் மழைக்குமான ஓர் ஒதுங்கிடம் அல்ல.



அது சமூக நிறுவனமும் கூட. அங்கே தான் சமூக நாகரிகத்தின் அத்திவாரம் இடப் படுகின்றது. எனவே வீடு என்பது குறைந்தபட்ச தகுதிகளையாவது கொண்டிருக்க வேண்டும் ' என்று தெரிவிக்கப்படுகின்றது. என்றபோதும் பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரையில் இது எட்டாக்கனியேயாகும். இதேவேளை தனிவீட்டுக் கலாசாரம் மலையக மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் அவசரமும் அவசி யமாகும். என்றபோதும் இதில் காணப்படும் இழுத்தடிப்புகள் ஒருபோதும் ஓய்ந்ததாக இல்லை. மலையக மக்கள் பிரஜாவுரிமையினைப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# தளிர்கள் துளிர்க்கின்றன!

# வரலாற்றுக் கடமையின் வாசல்கள் தட்டித் திறக்கப் படட்டும்....

அ.வி. முகிலினி

தூரதேசங்களில் மீண்டும் மீண்டும் மாவீரர் நாளன்று ஒலிக்கப்படும் எமது தேசியத் தலைவர் மேதகு வே பிரபாகரன் அவர்களின் 2008 ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரை அடுத்த தலைமுறையினரால் உள்வாங்கப்படும் காலம் கனிந்ததாய், 2023 ஆம் ஆண்டின் மாவீரர் நாள் முரசறைகிறதாகத் தெரிகிறது. எமது தேசம் தமிழீழம் என்பதை உணர்ந்து பல நாடுகளில் ஆணித்தரமான கருத்துகள் இளையவர்களால் நிறுவப் பட்டிருப்பதை உணர்கிறேன்.



"வரலாறு எனது வழிகாட்டி" என்கிறார் எமது தலைவர் மாமா.... வழிகாட்டிகளாக வாழ்ந்தும் காட்டினார்கள். எமது தேசத்தின் கடமை அந்த வழிகாட்டிகளிட மிருந்து யாரிடமும் கையளிக்கப் படாத நிலை யில் எங்கள் சமுதாயத்திற்குப் பிழையான வரலாறுகள் திணிக்கப் படுகின்றதை பலரும் உணரும் காலம் வந்தது மகிழ்ச்சி என்றாலும் எம் இனம் ஓர் சிதைவுற்ற இனமாக 15 ஆவது ஈழம் கடந்த மாவீரர் நாளில் உணர்கிறோம். சுயநலம் அற்ற சுமைதாங்கிகளின் வழிகாட்டுதலில் ஈழம் மலர்ந்திருக்க வேண்டும் என்பது இளையவர்களின் ஏக்கமாக உள்ளது. எம் இன விடிவிற்காக சுமைகளைச் சுமந்து வீரகாவியமாகிய அந்த மாவீரர்களின் வாசலில் வல்லமை தாரும், வழிகாட்டுங்கள் என்று இளைய மனங்கள் நின்று தொழுதது மறுக்கவும் மறைக்கப்படவும் முடியாத ஒன்றாகிவிட்டதை இந்த மாவீரர் நாள் உலகிற்கு எடுத்துரைத்து இருக்கும் என நம்புகிறோம்.

எமது சுதந்திரத்தை நாமே பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தனிப்பட்ட மனங்களாய் அனைவரும் அறிகிறோம். ஆனால் ஒரு சமுதாயமாய் அதை உணர்ந்தாலும் ஒன்றிணைய மறுப்பதே எமது கிளர்ச்சியை அணைத்து விடுகிறது! "சமாதான காலங்களில் எமது மனங்கள் ஆறுதல் படுத்தப்பட்டு பெரும் கிளர்ச்சிகள் தணிக்கப்படுகின்றன " என்று பல தசாப்தங்களுக்கு முன்னரே எமது அகிம்சை ஒளியாக தீபம் திலீபன் மாமா உரைத்திருந்தார். இப்போது எமது கிளர்ச்சியும் விடுதலை உணர்வும் சமாதானத்திலேயே தான் உறங்ககக் கொண்டிருக்கின்ற நிலை!! தூரதேசங்களின் தூரம் நம்மை எமது தேசியக் கடமைகளிலிருந்து தூரமாகவே கூட்டிச் செல்கின்றன.

இளைய தலைமுறையினர் இந்த உலகிற்குக் நேர்மையாய் கூறுகிறார்கள் தமிழீழம் எமது தேசமென! தடைகளை மீறி நாவரை அடங்கிக் கிடந்த எம் உரிமையை உரத்துக் கூறுகிற குரல்கள் எண்ணிக்கையில் அதிகரிக்க நேரிட்டால் எமது சுதந்திர அறைகூவல் உலகின் செவிப்பறைகளைக் கிழித்து அடக்கப்படும் சமுதாயத்தின் உரிமைகளை நிலைநாட்டும் மக்களாக தமிழீழத்துத் தலைமுறை திகழும் என்பது திண்ணம்.

தமிழீழ மாவீரர் நாள் ஒரு எழுச்சி நாள். மாவீரர் நாள் ஒன்று மட்டுமே எமது தேசத்தின் பெரும் அடையாளமாக கணிசமான அளவு மக்களை ஒன்றிணைக்கும் ஒரு தேசிய நாளாகத் திகழ்கிறது. இந்த நாளில் இளம் பெற்றோர்கள் பெருமளவில் தங்கள் பிள்ளைகளுடன் சமூக மளிப்பது வரலாற்றைக் கடத்தும் கடமையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை அனைவரும் உணருதல் அவசியம்.

காலத்தின் கட்டாயத்தில் குழப்பங்களுக்கு மத்தியில் மாவீரர் தினத்தில் பங்கு கொள்வது நிராகரிக்கப் படும் நிலைக்குத் தள்ளப்பட்டால் வரலாற்றில் விரிசல் ஏற்படும். இதைத் தவிர்ப்பது இளம் தலைமுறையினரது தலையாய கடமை. அந்த நாளில் மட்டுமல்லாது இடைவெளியற்ற தமிழீழத் தாய் நாட்டிற்கான பங்களிப்பை பல துறைகளில் மிளிர்ந்து கொண்டிருக்கும் எமது தலைமுறையினர் ஆற்ற வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்படுதல் நாம் எமக்காக வீழ்ந்தவருக்குச் செலுத்தும் மரியாதையாக இருக்கும்.

100 ஆண்டு காலங்களுக்குப் பின்னர் விடுதலை பெற்ற இனங்களும் வரலாற்றின் முக்கியத்துவம் அறிந்து அதை தமது கல்வி மற்றும் பொருளாதார வழங்களால் மேம்படுத்தும் மக்களாக இருக்கத் தவறியதில்லை. கல்விமான்களாகத் திகழ்கின்றன எமது ஈழத்தமிழ்ப் பிள்ளைகள் பெருமளவில் மண்,இன,மொழி விடுதலைக்காக உரமூட்டி எமது தாய் நாட்டை மீட்டெடுப்போம் என்று உறுதி ஏற்போம்.

• • •

## புலனாய்வாளர் ... தொடர்ச்சி ...

அந்தவகையில் இந்த கால் நடை வளர்ப்போர் சார்ந்த பொருளாதாரம் முற்றிலும் முடங்கி உள்ளது. அவர்களது பிள்ளைகள் கல்விக்காகவும் ஒரு நேர உணவிற்கும் போராடி வருகின்றனர். அவர்களது குடும்ப பெண்கள் கண்ணீர் விட்டு அழுவதை நான் நேரடியாகவே பார்த்தேன். நான்கு மாதமாக கால் நடைகள் மலைகள் காட்டில் சென்று உள்ளதால். போதிய மேய்ச்சல் இல்லை . ஆகையால் அவர்கள் பால் கறப்பதில்லை. அவர்கள் நாளாந்த வருவாய் இழந்து மிகவும் துன்பப்படுகின்றார்கள்.

தற்போது காவல் நிலையம் ஒன்று உருவாகி உள்ளது அதனால் ஊடக துறையினர், வெளி நபர்கள் என தற்போது யாரும் செல்ல முடியாது. சட்டவிரோதமான ஆயுதங்களுடன் ஒரு இன வெறி கொண்ட சட்ட விரோத கும்பல் இயங்குவதால் கால் நடைகள் வளர்ப்போர் தங்களது மாடுகளை சுதந்திரமாக மேச்சல் நிலத்தில் மேய்க்க முடியாது சிரமப்பட்டு வருகின்றனர். அது மாத்திரமல்ல பால் கொள்வனவு செய்கின்ற வாகனம் கூட அங்கு செல்ல இயலாத நிலை காணப்படுகிறது. இதனால் தான் அந்த மக்கள் வீதியில் கூடாரம் அமைத்து போராட்டம் நடாத்தி வருகிறார்கள்.

### பால் உற்பத்தி கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தில் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது?

உண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் நான்கு இலச்சத்துக்கு அதிகமான கால்நடை உள்ளது. இவை மைலத்த மடு, மாதவனை வெட்டை மேய்ச்சல் நிலத்தில் உள்ளது. அதில் இருந்து நெஸ்டே கம்பனிக்கு தினம் தினம் 80 முதல் 90 ஆயிரம் லீற்றர் பால் ஏற்றுமதி செய்யப்பட்டது சில நேரங்களில் பால் குறையும் போது சற்று குறைவாக இருக்கும். அதைவிட தினமும் பத்தாயிரம் லீற்றர் பால் வெளி மாவட்டங்களுக்கு சென்று கொண்டிருந்தது.

இந்த பால் எந்தவித கலப்படம் இல்லாமல் நாட்டின பசுக்களில் இருந்து பெறப்படும் சுத்தமான பால். இந்தப் பால் கொழுப்பு சத்து மற்றும் சுவை அதிகமாக உள்ளதால் தென்பகுதியில் இந்த பாலுக்கு ஒரு வரவேற்பு உள்ளது. அதே நேரம் மிக குறைந்த விலைக்கு பாலை கொள்வனவு செய்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லீற்றர் தண்ணீர் விலை 130 அதே நேரம் பாலின் விலை 120 அப்படி இருந்தும் அதனை உற்பத்தி செய்யா விடாது தடுக்க படும் நிலைதான் இங்கு உள்ளது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்த வரையில். கால் நடை, மீன்பிடி, விவசாயம் போன்றவை பிரதானமான வருவாய் பெறும் தொழில். அதிலும் குறிப்பாக கால் நடைகள் எருமை மாடு பசுமாடு வழப்பில் ஒரு முன்னேறிய பிரதேசமாக உள்ளது.

ஆனாலும் சரியான விலை இல்லை. அதை விட நிரந்தரமாக கால்நடை மேய்வதற்கு மேய்ச்சல் நிலம் வழங்குவதன் ஊடாக அதனை சரி செய்ய முடியும். மாறாக நாட்டில் பொருளாதாரத்தில் பாரிய வீழ்ச்சி உள்ள போதிலும். பால் உற்பத்தி சிறந்து விளங்கும் பொருளாதாரத்தில் ஒன்று. அது தமிழர்களது கையில் உள்ளதால் அதனை சீர் செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவில்லை. காரணம் இவை தமிழர்களது என்பதால் மாத்திரம்.

• • •

# இஸ்ரேல் சந்திக்கப்போகும் தந்திரோபாய வெற்றியும் மூலோபாயத் தோல்வியும்

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் 60 நாட்களை கடந்தும் தொடர்கின்றன. ஒக்டோபர் 7 ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலினுள் மேற்கொண்ட தாக்குதலில் 300 இராணுவத்தினரும் 1200 பொதுமக்களும் கொல்லப்பட்ட நிலையில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் வான் மற்றும் தரைத்தாக்குதல்கள் 7 நாட்கள் இடைநிறுத்தப்பட்டபோதும் தற்போது மீண்டும் தொடர்கின்றது.



முதலில் வடக்கு காசா பகுதியின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தற்போது தெற்கு நோக்கி திரும்பியுள்ளது. காசா நகரப் பகுதியில் இருந்து 162 ஆவது படையணியும், கிழக்கு பகுதியில் இருந்து 36 ஆவது படையணியும் தாக்குதல்களை கடந்த திங்கட்கிழமை (4) ஆரம்பித்துள்ளன.

கடந்த இரண்டு மாதங்கள் இடம்பெற்று வரும் தாக்குதல்களில் இதுவரையில் 17,000 பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், அவர்களில் 7212 பேர் சிறுவர்கள் எனவும், 4885 பேர் பெண்கள் எனவும் அல்ஜீரா ஊடகம் தெரிவித்துள்ளது. 45,616 பேர் காயமடைந்துள்ளனர், அவர்களில் 8963 பேர் சிறுவர்கள். மேலும் 7800 பேர் காணாமல் போயுள்ளனர், அவர்களில் 4700 பேர் பெண்கள்.

அங்கு 286 சுகாதாரத்துறை பணியாளர்களும், 80 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர். 1.5 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இதனிடையே கடந்த 60 நாள் சமரில் 30,000 படையினரை கொண்ட ஹமாஸ் அமைப்பின் படையில் 5000 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என வொசிங்டன் தகவல்கள் தெரிவித்துள்ளன. ஆனால் சில நூறு படையினரே கொல்லப்பட்டிருக்கலாம் என இஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



அதேசமயம், இஸ்ரேலின் தரப்பில் தரைத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 85 படையினர் கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேலிய தரப்பு தெரிவித்துள்ளது. இறந்தவர்களில் பிரித்தானியாவை சேர்ந்த 19 வயதான படைவீரரும் அடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.


எனினும் தாம் மேற்கொண்டுவரும் கெரில்லா தாக்குதல்களில் 30 இற்கு மேற்பட்ட கவசவாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதாக அல்குசாம் பிரிகேட் தெரிவித்துள்ளது.

இரு தரப்பும் ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன. காசா பகுதியில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் இஸ்ரேலின் ரெல் அவிவ் பகுதியில் வீழ்ந்து வெடித்ததால் பொதுமக்களின் இருப்பிடங்கள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இஸ்ரேல் தொடர்ந்து மேற்கொண்டுவரும் வான் தாக்குதல்களினால் பல கட்டடங்கள் அழிவடைந்துள்ளன. மேலும் இந்த வாரம் இடம்பெற்ற தாக்குதலில் இஸ்ரேல் மிகவும் சக்திவாய்ந்த புதிய வகை குண்டு ஒன்றை எப்-16 விமானத்தில் இருந்து வீசியதாக தெரிவிக்கப்படுகின்றது.

சமூகவலைத்தளங்களில் கிடைக்கப்பெற்ற காணொளிகள் மற்றும் புகைப்படங்களின் அடிப்படையில் வீசப்பட்ட குண்டு ஸ்பைஸ்-2000 எனப்படும் 900 கிலோ எடையுள்ள குண்டு என தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேலிய தயாரிப்பான இந்த குண்டு எப்-15, எப்-16, மிராஜ்-2000 மற்றும் எஸ்யூ-30 ஆகிய விமானங்களில் இருந்து வீசப்படக்கூடியது.



அதேசமயம், இதுவரையில் வீசப்பட்ட குண்டுகளின் அளவு இரண்டு அணுக்குண்டுகளுக்கு சமன் என அல்ஜசீரா ஊடகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் தற்போது மேற்கொண்டுவரும் தாக்குதல்கள் தந்திராபாய ரீதியில் இஸ்ரேலுக்கு ஒரு வெற்றியை கொடுத்தாலும், நீண்டகாலத்தில் அது மூலோபாயத் தோல்வியை கொடுக்கும் என பொது மக்கள் கொல்லப்படுவது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலாளர் லெயிட்ஸ் ஒஸ்ரின் தெரிவித்துள்ளார்.

அதாவது காசாவில் கொல்லப்படும் பொது மக்கள் தொடர்பில் அமெரிக்காவின் பொறுமை தீர்ந்துவிட்டதாகவே இதனை கருத முடியம். இந்த விவகாரத்தில் இஸ்ரேலுக்கும் பிராந்திய நாடுகளுக்குமிடையில் சிக்கி நசிபடுவதாகவே அமெரிக்கா உணர்கின்றது.

இதனிடையே, பாலஸ்தீனத்தின் மேற்கு கரை பகுதியில் கலவரங்களில் ஈடுபடுபவர்களுக்கு அமெரிக்காவுக்கான நுழைவு அனுமதி வழங்குவது தடை செய்யப்படும் என அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனி பிளிங்டன் தெரிவித்துள்ளார்.

வன்முறைகளில் ஈடுபடுபவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கும் நுழைவு அனுமதி தடை செய்யப்படும். வன்முறைகளை தடுப்பதற்கு இஸ்ரேல் போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இது தொடர்பில் நான் பலஸ்தீன அதிகாரிகளுடனும் பேச்சுக்களை மேற்கொண்டுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் குடியேற்றவாசிகளுக்கு எதிராக கிளிங்டன் நிர்வாகம் மேற்கொண்ட நுழைவு அனுமதி தடைகளுக்கு பின்னர் தற்போதே அமெரிக்கா தடைகளை கொண்டுவந்துள்ளது. இதுவரை இஸ்ரேலிய படையினர் மேற்கு கரையில் மேற்கொண்டுள்ள தாக்குதல்களில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகளை தாம் வரவேற்பதாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட பலஸ்தீன துதரகத்தின் தூதுவர் குசாம் செம்லற் தெரிவித்துள்ளார். இது ஒரு சரியான நடவடிக்கை. ஆனால் சட்டவிரோத குடியேற்றவாசிகள், அவர்களுக்கு நிதி வழங்குபவர்கள், ஆதரவு தரும் அமைப்புக்கள் ஆகியவற்றையும் அமெரிக்கா தடை செய்யவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.




ஆனால், ஐ.நாவின் மனிதாபிமான இணைப்பாளரான லைன் கெஸ்ரிங்கிற்கான நுழைவு அனுமதியை இஸ்ரேல் இடைநிறுத்தியுள்ளது. காசாவின் நிலை மிகவும் மோசமாக வருவதாக

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# அமெரிக்க நிதியில் கொழும்பில் இந்தியாவின் துறைமுக முனையத் திட்டம்: சீன எதிர்ப்பின் வெளிப்பாடா?

தமிழில்: ஜெயந்திரன்

அமெரிக்காவின் நிதியுதவியுடன், இந்திய ஆளுங்கட்சிக்கு நெருக்கமான தனியார் குழுமம் ஒன்றினால், பகுதியாக முன்னெடுக்கப்படும் துறைமுகம் தொடர்பான ஒரு திட்டம், இந்து பசிபிக் பிராந்தியத்தில், தொடர்ச்சியாக அதிகரித்துவருகின்ற சீனாவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்கு, முன்னெடுக்கப்படும் முற்றிலும் ஒரு புதுவகையான கூட்டிணைப்பைக் கட்டியம் கூறுவதாக அமைகிறது.



துறைமுகங்கள் கட்டுவதிலிருந்து, உணவுக்கான எண்ணெய் என்பவற்றைத் தயாரிக்கின்ற செயற்பாடு வரை, இந்தியாவைச் சேர்ந்த செல்வந்தரான கௌதம் அதானியால் (Gautam Adani) நெறிப்படுத்தப்படுகின்ற அதானி குழுமம் (Adani Group), இலங்கையின் தலைநகரத்தில் அமைந்திருக்கின்ற, கொழும்பு மேற்கு பன்னாட்டு முனையத் திட்டத்தை (Colombo West International Terminal Project) முன்னெடுத்துவருவதுடன், குறிப்பிட்ட திட்டத்தில் 51 வீதமான பங்குகளைக் கொண்டிருப்பதோடு, 500 மில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட அமெரிக்க நிதி ஆதரவுத் தளத்தையும் கொண்டிருக்கிறது. ஜோண் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனமும் (John Keells Holdings, இலங்கை அரசினால் நிர்வகிக்கப்படுகின்ற துறைமுக அதிகார சபையும் (Sri Lanka's Port Authority) திட்டத்தின் ஏனைய பங்குகளைக் கொண்டிருக்கின்றன.

அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இணைந்து, இந்தியாவும் அமெரிக்காவும் குவாட் இராஜீக வலையமைப்பை (Quad-diplomatic network) உருவாக்கியிருப்பதுடன், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு, சீன உட்கமைப்புத் திட்டங்களுக்கான ஒரு மாற்றீட்டை வழங்குவதில், தாம் குறியாக இருப்பதாக மேற்படி நாடுகளின் தலைவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அரச மற்றும் தனியார் கூட்டிணைவைப் பிரதிபலிக்கின்ற இந்தப் புதிய துறைமுக முனையத் திட்டம், இவ்வாறாக முன்னெடுக்கப்படும் முதலாவது திட்டமாகப் போற்றப்படுகின்றது.



“சீனாவின் மேலும், அனைத்துத் துறைகளுக்கும் ஊடுருவுகின்ற அதன் வர்த்தகம் மற்றும் இராணுவப் பாதைகளிலும் தங்கியிருக்கின்ற சிறிய நாடுகளைப் பாதுகாப்பதில், குவாட் அமைப்பு திடசங்கற்பம் பூண்டிருப்பதை, இந்த நகர்வு சுட்டிக்காட்டுகின்றது” என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள். துறைமுகத்தின் இன்னொரு முனையம், சைனா மேச்சண்ட்ஸ் போட் ஹோல்டிங்ஸ் கோ லிமிட்டெட் *(China Merchants Port Holdings Co Ltd.)* என்றழைக்கப்படும் சீன நிறுவனத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

“அமெரிக்க நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் இக்குறிப்பிட்ட திட்டத்தை வெறும் வர்த்தக முயற்சி என்று பார்ப்பது விவேகமான விடயம் அல்ல” என்று சிங்கப்பூரில் அமைந்திருக்கின்ற எசெக் ஆசிய-பசிபிக் வர்த்தகக் கல்லூரியில் *(ESSEC Business School Asia-Pacific)* புவிசார் அரசியல் பேராசிரியராகப் பணிபுரிகின்ற செடோமீர் நெஸ்ற்றோவிச் *(Cedomir Nestrovic)* கருத்துத் தெரிவித்தார்.

“அமெரிக்க கூட்டாட்சி அரசின் ஒரு நிறுவனமான அமெரிக்கப் பன்னாட்டு நிதி நிறு வனம் குறிப்பிட்ட திட்டத்திற்குத் தேவையான ஐந்தில் நான்கு பகுதி நிதியாகிய, 553 மில்லியன் டொலர்களை இத்திட்டத்திற்கு வழங்குவதிலிருந்தே குறிப்பிட்ட திட்டத்தின் புவிசார் அரசியல் தன்மை புலப்படுகின்றது” என்று அவர் மேலும் கூறினார்.

நிறுவன ரீதியாக இவ்வளவு பெரிய நிதித்தொகையை இவ்வாறான திட்டங்களில் அமெரிக்கா செலவிடுவது மிகவும் அரிதானதாகும் என்று நெஸ்றோவிச் சொன்னார். அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே நிலவுகின்ற போட்டித்தன்மையே இவ்வாறான ஒரு அரசியல் ரீதியிலான நோக்கத்துக்குக் காரணமாகும்.

**விடயங்கள் வழமைபோல இருக்கின்றன எனப் பார்க்க முடியாது**

தென் கொரியாவிலும் ஜப்பானிலும் இராணுவத் துருப்புகளை நிறுத்துவதன் மூலம், சீனாவைக் கட்டுக்குள் வைத்திருக்க அமெரிக்கா எடுத்து வருகின்ற முயற்சி, விரிவான குவாட் அமைப்பின் மூலம் தற்போது பொருண்மிய தளத்துக்கும் பரவலாக்கப்பட்டு, சீன முதலீடுகளைக் குறிபார்க்கத் தொடங்கியிருக்கிறது என்று நெஸ்றோவிச் விளக்கினார்.

சிறிய நாடுகளுக்கு உட்கட்டமைப்பு ரீதியிலான முதலீடுகளைப் பொறுத்தவரையில், பேஜிங் (Bejing) சம்பந்தப்படாத மாற்றீடுகளை எவ்வாறு வழங்கி;, சிறிய நாடுகளுக்கு ‘நீங்கள் தனியே இல்லை’ என்ற செய்தியைச்சொல்வதோடு மட்டும் நிறுத்தாது, சீனா மீது ஒரு குறிப்பிட்ட அளவு அழுத்தத்தை எவ்வாறு பிரயோகிக்கலாம் என்பதே இந்த துறைமுக முதலீட்டுக்கான நோக்கமாக இருக்க முடியும். இவ்வாறு கூட்டுச் சேர்ந்து துறைமுக முனையத்தைக் கட்டியெழுப்பும் மாதிரி வெற்றியடையுமாக இருந்தால், இதே நடைமுறையை குறிப்பிட்ட பிராந்தியத்தில் ஏனைய நாடுகளிலும் அமெரிக்கா அறிமுகப்படுத்தக்கூடிய வாய்ப்பு நிறையவே இருக்கிறது.

“தனியே சிறீலங்காவில் மட்டும் மேற்கொள்ளப்பட்ட ஒரு முதலீட்டாக இதனைக் கருத முடியாது. ஒரு பாரிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாகவே இவ்விடயம் பார்க்கப்பட வேண்டும்” என்று நெஸ்றோவிச் தொடர்ந்து கூறினார்.

சிறிலங்காவிலும்பரந்த இந்துமாகடலிலும், விசேடமாக இந்த முக்கிய கப்பல் பாதையிலும், தமது செல்வாக்கைச் செலுத்துவதற்கு, கடந்த பல வருடங்களாகவே பேஜிங்கும் புது டெல்லியும் போட்டி போட்டுச் செயற்பட்டு வந்திருக்கின்றன.

தனது நாட்டின் தென்பகுதியிலுள்ள பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கு கடல் பாதைகள் மிகவும் முக்கியமானவை என்பதை இந்தியா மிகவும் நன்கு உணர்ந்திருக்கின்றது. மூன்று வருடங்களுக்கு முன்னர் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே எல்லைகளில் மோதல்கள் நடைபெற்றிருக்கும் பின்னணியில், இந்தக் கடல் பாதைகள், மோதல் பிரதேசங்களாக மாறக்கூடிய ஆபத்தை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.




உல்லாசப் பயணத்துறையில் அதிகமாகத் தங்கியிருந்த சிறீலங்காவின் பொருண்மியம் கோவிட் பெருந்தொற்றுக்காலத்தில் முற்றாகச் சரிவடைந்த பின்புலத்தில், அந்த நாடு தன்னை அழுத்திய கடன் சுமையிலிருந்து மீளுவதற்கு, பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவியை நாடியிருந்தது. அவ்வாறான ஒரு சூழலில், 4 பில்லியன் டொலர்கள் நிதியுதவியையும் மனி தாய உதவிகளையும் சிறீலங்காவுக்கு இந்தியா வழங்கியிருந்தது.

அவ்வாறான நிதியுதவியைத் தொடர்ந்து, சிறீலங்காவில் மிகப் பெரிய நீண்ட கால முதலீடுகளை மேற்கொள்ளுவதில் இந்தியா கவனம் செலுத்தி வருகின்றது. புதுப்பிக்கத்தக்க சக்தித் திட்டங்கள், மற்றும் சிறீலங்காவின் வடகிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள திரிகோணமலைத் துறைமுகத்தை ஒரு பாரிய துறைமுகமாக மாற்றும் திட்டங்கள் போன்றவை இவற்றுள் அடங்கும்.

இந்தியாவின் கிழக்குப் பிரதேசங்களில் அமைந்துள்ள ஆழங்குறைந்த துறைமுகங்களில், தற்போது தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற சிறிய கப்பல்கள், தமது சரக்குகளை உலக சந்தைக்கு எடுத்துச்செல்ல, கொழும்புத் துறைமுகத்தில் உருவாக்கப்படுகின்ற புதிய முனையம் உதவும் என்ற நம்பிக்கை வெளிப்படுத்தப்படுகின்றது.

**வர்த்தகத்துக்கான மிக முக்கிய கடல் பாதை**

இந்தியாவின் தென் மாநிலமான கேரளாவில், முதல் தடவையாக சரக்குப் பரிமாற்றத் துறைமுகம்




ஒன்றை, அதானி குழுமம் தற்போது கட்டமைத்து

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## இஸ்ரேல் சந்திக்க ... தொடர்ச்சி ...

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையே இந்த தடைக்கான காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. கேஸ்ரிங்கை நாட்டுக்குள் அனுமதிக்கப் போவதில்லை என இஸ்ரேலின் வெளிவிவகார அமைச்சர்வெளிப்படையாகவே தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் நடவடிக்கைகளை பார்க்கும் போது தற்போதைய மோதல்கள் ஒரு பிராந்திய மோதலாக மாறுவதை தடுப்பதற்கு மிகவும் தீவிரமாக செயற்படுவதாக தெரிகின்றது.

ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் புதன் கிழமை(6) ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவுதி அரேபியாவுக்கு திடீரென மேற்கொண்ட பயணமும் தற்போதைய மத்திய கிழக்கு நெருக் கடியை அதிகமாக்கியுள்ளது.

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதல்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் பூட்டீனின் பயணத்தில் முக்கிய பேசு பொருளாக இருக்கும் என்று கருதப்படுவதால் பேர் பிராந்தியத்திற்குள் விரி வடைவதை அமெரிக்கா விரும்பவில்லை என தெரிகின்றது.

அதேசமயம், இஸ்ரேலின் முன்றாவது மிகப்பெரும் துறைமுகமான எய்லற் துறைமுகம் மூடப்படுவதாக குளோப்ஸ் என்ற இஸ்ரேலின் பத்திரிகை தெரிவித்துள்ளது. இந்த துறைமுகத்தின் முடக்கம் என்பது இஸ்ரேலிய கப்பலகளின் பயணப்பாதையை அதிகரிக்கலாம். அது அதிக செலவீனங்களை ஏற்படுத்தும் என தெரிவிக் கப்படுகின்றது.

கப்பல்கள் மீது ஏமன் படையினர் தொடர்ந்து மேற்கொண்டுவரும் தாக்குதல்களே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. புதன்கிழமையும்(6) இந்த துறைமுகத்திற்கு மேலாக ஏமனின் குரூஸ் ஏவுகணைகளை இஸ் ரேலிய படையினர் இடைமறித்து தாக்கியதாக அல் அரபியா பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற தாக்குதலில் பிரித்தானியாவில் பதிவுசெய்யப்பட்ட யுனிரி எக்ஸ்புளோரர் என்ற கப்பல் கடுமையாக சேத மடைந்ததாகவும், மற்றொரு கப்பல் மீதும் தாக்குதல் இடம்பெற்றதாகவும் இஸ்ரேலிய படைத்துறை பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

அவற்றை காப்பாற்ற சென்ற அமெரிக்கா வின் கார்னி எனப்படும் டிஸ்ரேயர் கப்பல் மீதும் ஹாதிஸ் படையினர் தாக்குதல்களை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. நடக்கும் சம்பவங்களை பார்க்கும்போது போர் அமெரிக்காவின் கைகளை மீறிச் சென்றுவிட்டதோ என எண்ணத் தோன்றுகின்றது.

• • •

## 39வது ஒதியமலை ... தொடர்ச்சி ...

செல்வராசா என்பவரது உழவு இயந்திரத்தை மறித்து அதிலிருந்தவர்களையும் பிடித்து கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திற்குக் கொண்டு சென்றார்கள்.

சிறிது நேரத்தின் பின் அலறல் சத்தமும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தமும் கேட்டது. அத்துடன், பிடித்தவர்களில் வயோதிபர்களாகப் பார்த்து கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சின்னையா, கனகையா, கணபதிப்பிள்ளை ஆகியோரைத் தங்களது பாதுகாப்பிற்காக அவர்களுடைய பண்ணைக்கு எனது உறவினர் ஒருவரின் உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுவிட்டார்கள்.

இராணுவம் வந்ததை அறிந்து காட்டுக்குச் சென்றிருந்த நான் பின்னர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தினுள் ஓடிச்சென்று பார்த்தபோது மூன்று நான்கு பேராக நிறுத்தி வைத்து இருபத்தி ஏழு பேரையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்திருப்பதைக் கண்டேன். நான் பார்த்த பொழுது குற்றுயிருடன் இருந்த சிலரும் தண்ணீர் தண்ணீர் எனக் கேட்டுக் கொண்டு இறந்ததையும் கண்டேன்.

பின்னர் அவர்களில் கால் வேறு, தலை வேறாக இருந்தவர்களை சீராக கட் டடத்தின் இரு மருங்கும் அடுக்கி விட்டு அங்கிருந்து கால்நடையாக முல்லைத்தீவு நோக்கி ஓடினோம். அந்த நேரம் இராணுவக் கெடுபிடிகள், ஊரடங்கு உத்தரவுகள் அதையும் மீறி பெரிய முயற்சியெடுத்து அரசாங்க அதிபர், காவற்துறை அதிகாரிகள், நீதியாளர்கள், உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள் என அனைவரையும் அழைத்து வந்து நடந்த சம்பவத் தைக் காட்டினோம்.

இறந்தவர்களது கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்களது கண்கள், காதுகள், மூளைகள் வெளியிலே வந்த கோரக்காட்சியைப் பார்த்து அவர்கள் கதிகலங்கிப் போனார்கள். பின்னர் முழுக் கிராமத்தினரும் சேர்ந்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு முன்பாக பெரிய மரங்கள் போட்டு அதன் மேல் அவர்களை அடுக்கித் தீ மூட்டினோம். அதன் பின்பு இறந்த உறவுகளை நினைத்து அழுது புலம்பிக்கொண்டிருக்கும் சமயம் முல்லைத் தீவிலிருந்தும் சிலோன் தியேட்டர், டொலர்பாம், கென்பாம்களிலிருந்தும் இராணுவத்தினர் ஒதியமலை நோக்கி வருவதாகக் கேள்விப்பட்டு எல்லோரும் பாதுகாப்பிற்காக நெடுங்கேணி நோக்கி வந்தோம்.'' இவ்வாறு தெரிவித்தார்.

## விடுதலை வேட்... தொடர்ச்சி ...

இவ்வளவு அச்சுறுத்தல்களுக்கும், கைது களுக்கும் மத்தியில்தான் இம்முறை மாவீரர் தினம் பேரெழுச்சியாக நிறைவடைந்துள்ளது. இந்தக் கெடுபிடிகள், அச்சுறுத்தல்கள் எல்லாம் தமிழர்கள் பார்க்காதவை அல்ல. அனுபவிக்காதவை அல்ல. ஒருவகையில் இவ்வகையான அச்சுறுத்தல்கள்தான் மக்களை மாவீரர் தினம் மீதான பற்றுதலை அதிகப்படுத்துகின்றன.

### தவிர்த்திருக்க வேண்டிய விடயம்

இதில் தவிர்த்திருக்க வேண்டியது ஒரே ஒரு விடயம்தான். கோப்பாய் மாவீரர் துயிலு மில்லத்திற்கு பெண் போராளிகள் வேட மணிந்து சிறுவர்களை அழைத்து வருவதைத் தவிர்த்திருக்கலாம். பொதுவாக நாம் நம் வீட்டுக் குழந்தைகளுக்கு நமக்கு எதிரான அர ஒடுக்குமுறைகள் குறித்தோ, தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டம் குறித்தோ, அவர்களின் தியாகங்கள் குறித்தோ சொல்லிக் கொடுப்பதில்லை. பிள்ளைகள் அவற்றைக் கேட்டாலும் பயத்தின் காரணமாக எதனையும் சொல்வதில்லை. வரலாற்றினைக் கடத்து வதில்லை. அண்மைக்காலமாக மெல்லமெல் லமாக அந்த மனநிலையில் மாற்றம் நிகழ்கிறது. முள்ளிவாய்க்கால் நினைவுதினம், மாவீரர் தினம் போன்றவற்றுக்கு பெற்றார் சிலர் தங்கள் பிள்ளைகளை அழைத்து வருகின்றனர். கடந்த காலத்தைக் கற்றுக்கொடுக்கின்றனர். இவ்வேளையில், கோப்பாய்க்கு பெண் போராளிகள் வேடமணிந்து வந்த சிறுவர்களின் பெற்றார் மீது நடத்தப்படும் விசாரணை, கடந்தகால வரலாற்றைத் தம் பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கத் தயாராகிய பெற்றோருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். இவற்றிலிருந்து ஒதுங்கிக்கொள்ள சிந்திக்க வைக்கும். ஆகவே ஒடுக்குமுறைக்குள்ளான இனமொன்று, ஒடுக்கு முறைக்குள்ளிருந்துகொண்டே தனக்கு நடந்திருக்கும் ஒடுக்குமுறைகளை சந்ததி கடத்தும் வழிமுறைகள் குறித்து அக்கறையோடும், அவதானத்தோடும் செயற்படுவது அவசியமான தாகும்.

உதாரணத்திற்கு மாவீரர் மாதத்தில் இடம்பெறும் மரநடுகையானது, மிகக் கனதி யானதும், எல்லாக் காலங்களிலும் நின்று நிலைக்கக்கூடியதுமான விடுதலைப் புலிகள் தொடர்பான நினைவின் அரசியலைக் கடத்து கின்றது. வன்னி பெருநிலமெங்கும் விடுதலைப் புலிகள் நடுகைசெய்த மரங்கள் இன்று தோப் பாகி நிற்கின்றன. அவற்றைப் பார்க்கும் அனைவருக்கும் அல்லது வெளியிலிருந்து வருகைதந்து அவற்றை நோக்கும் அனைவருக்கும் விடுதலைப் புலிகள் பற்றிய எண்ணம் ஒருகனம் வந்துபோகிறது. இவ்வளவு ஆழமாக இயற்கை நேசித்த ஓர் அமைப்பை இழந்திருக்கிறோம் என்ற வேதனையை உணரவைக்கிறது. இந்த வழியில் அமைதியாக நின்றபடி தமிழர் போராட்ட வரலாற்றினை சந்ததி கடத்துவதற்குப் பல வழிமுறைகள் உள்ளன. அவை குறித்தெல்லம் இனிவரும் மாவீரர் நாட்களில் தமிழர்கள் சிந்திக்கவேண்டும்.

ஆனால் இந்த ஆண்டினை விட இனிவரும் காலங்களில் மாவீரர் நாளுக்கு அரசும், அதன் பயங்கரவாதக் கட்டமைப்பும் அசுரத்தனமாக செயற்படப் போகிறது. அதற்கு கட்டியங்கூறியிருக்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ். இது குறித்து பாராளு மன்றத்தில் கருத்துத் தெரிவித்த அவர், "உறவுகளை நினைவுகூருகின்றோம் என்ற போர்வையில் மாவீரர் தின நினைவேந்தல்களை நடத்த அனு மதிக்க முடியாது. அவ்வாறான நிகழ்வுகளைச் செய்தால் பொலிஸார் நிச்சயம் கைதுசெய்வார்கள். அதனைத் தடுக்க முடியாது.'' ஆகவே இம்முறை நடைபெற்றிருக்கும் அனைத்துக் கைதுகளுக்கும் பின்னால் அரசு இருந்திருக்கின்றமையும், இனிவரும் காலங்களில் நடக்கும் நினைவேந்தல் நிகழ்வுகளை அரச ஏவல்படைகள் இரும்புக்கரம் கொண்டு அடக்குமுறைக்குள்ளாக்கப்போவதை யும் வெளிப்படையாக அரசு அறிவித்திருக்கிறது. இந்தத் தடைகளையும், ஒடுக்குமுறைகளையும் உடைத்தெரிந்தே இனிவரும் காலங்களில் நினவேந்தல்களைச் செய்யவேண்டியிருக்கும். அதனைத் தமிழர்கள் துணிந்து செய்வர் என்பதற்கு தமிழ் தேசிய மாவீரர் எழுச்சி நாள் 2023 சாட்சியாக அமைகிறது.

• • •

## தமிழரசுத் தலை... தொடர்ச்சி ...

கருத்துக்களும் இவ்விடயத்தில் உள்ளது. சர்வதேச சமூகத்தைக் கையாண்டு அவர் கடந்த 14 வருட காலத்தில் எதனைப் பெற்றுக்கொடுத்தார் என்ற கேள்வியும் அவருக்கு எதிராக முன்வைக் கப்படுகின்றது.

சிறிதரனைப் பொறுத்தவரையில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் இணைந்து செல்லக் கூடிய ஒருவராக பலரும் அவரைப் பார்க்கின்றார்கள். ஆனால், அவர் கிளிநொச்சிக்குள்ளேயே தனது அரசியலை நடத்துவதாக அவருக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

திருமலை மாவட்ட எம்.பி. பதவியை சம்பந்தன் ராஜினாமா செய்ய வேண்டும் என அண்மையில் சுமந்திரன் தெரிவித்தமை தமிழ் அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனால், சுமந்திரன் மீது கடும் சீற்றமடைந்திருக்கும் சம்பந்தன் இவ்விடயத்தில் எவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பார். யாருக்கு ஆதரவாக தன்னுடைய செல்வாக்கைப் பிரயோகிப் பார் என்ற கேள்விகளும் உள்ளன.

இதனைவிட, சுமந்திரன் - சிறிதரன் போட்டி தமிழரசுக் கட்சியில் பிளவை ஏற்படுத்துமா என்ற கேள்வியும் எழுந்திருக்கின்றது. ஒருவர் தலை வரானால், மற்றவர் அவரின் கீழ் இயங்குவாரா என்பதுதான் இதற்குக் காரணம்!

இந்த நிலையில் தமிழரசு வட்டாரங்கள் பரபரப்பாகக் காணப்படுகின்றன. அடுத்த வரும் வாரங்கள் இன்னும் பரபரப்பாகலாம். பிறக்கப் போகும் ஆண்டு பரபரப்பானதாகவும், தேர்தல்கள் நிறைந்த ஆண்டாகவும் அமையப் போகின்றது என்பதற்கு தமிழரசுக் கட்சித் தேர்தல் கட்டியம் கூறுவதாக அமையப்போகின்றது.

• • •

## அமெரிக்க நிதி... தொடர்ச்சி ...

வருகிறது. அடுத்த வருடத்தின் இறுதியில், இத் துறைமுகம் செயற்பாட்டு நிலைக்கு வரும் என நம்பப்படுகிறது. கடல் வர்த்தகத்தின் பெரும் பகுதி சீனாவின் ஆதிக்கத்தில் தற்போது இருக்கும் பின்புலத்தில், இந்த வர்த்தகத்தின் கணிசமான பகுதியை தனதாக்க இந்தியா இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

சிறீலங்காவில் ஏற்கனவே ஒரு முனையத்தை சீனா ஏற்கனவே நிர்வகித்து வருகிறது. அதானி குழுமம் இவ்வாறான ஒரு முயற்சி எடுக்காத சூழலில், சேவைகளுக்கான விலைகளைக் குறைப்பதன் மூலம் இந்தியாவிடமிருந்து சரக்குகளை தம்பால் சீனா கவர்ந்திழுத்திருக்கும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத இந்திய கப்பல் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆசியாவில் மேலும் பல சரக்குப் பரிமாற்றத் துறைமுகங்களை அதானி குழுமம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

சிறீலங்காவைத் தொடர்ந்து பங்களாதேஷ், வியட்நாம் போன்ற நாடுகளுக்கும் தங்கள் செயற்பாடுகளை விரிவாக்கப் போவதாக அதானி துறைமுகங்கள் மற்றும் பொருண்மிய வலயத்துக்கான நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்ற கரான் அதானி *(Karan Adani)* கருத்துத் தெரிவித்தார். இந்தியாவின் துறைமுகங்களை இயக்குகின்ற பெரும் நிறுவனமாக அதானி குழுமம் விளங்குகின்றது. இந்தியாவின் கிழக்கு, மேற்கு இரு திசைகளிலும் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட துறைமுகங்களைக் கொண்டிருக்கும் அதானி குழுமம், தற்போது பங்களாதேஷ், வியட்நாம், தன்சானியா போன்ற நாடுகளுக்கும் தங்கள் செயற்பாடுகளை விரிவாக்கவிருக்கின்றது. சிறீலங்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இந்தக் குழுமம் ஏற்கனவே கட்டமைத்துக்கொண்டிருக்கின்ற துறைமுகங்களுக்கு இது மேலதிகமானதாகும்.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஹின்டன்பேர்க் ஆய்வு *(Hindenberg Research)*, அதானி குழுமத்தின் நிதிக்கையாடல் தொடர்பாக மிகக் கடுமையான குற்றச்சாட்டுகளை இந்த ஆண்டின் ஜனவரி மாதத்திலே முன்வைத்திருந்தது. அந்தக் குற்றச்சாட்டுகளின் பாதிப்புகளிலிருந்து தற்போது மீண்டு எழுகின்ற அதானி குழுமம், உலகளாவிய வகையில், தனது வர்த்தக நடவடிக்கைகளை பரவலாக்க முயற்சிக்கிறது என்று நெஸ்றோவிச் குறிப்பிட்டார்.

இந்திய வர்த்தக முயற்சிகள் விரைவில் உலகளாவிய தன்மையைப் பெறவிருக்கின்றன. சிறீலங்காவில் அதானி குழுமம் எடுக்கின்ற முயற்சி வெற்றி பெறுமாயின், அதே அணுகுமுறையை அந்தக் குழுமம் ஏனைய நாடுகளிலும் முன்னெடுக்கும் சாத்தியம் இருக்கிறது.

### தனியார் அமைப்புகளுடன் கூட்டு

சிறீலங்காவின் புதிய துறைமுக முனையத்தைப் பொறுத்தவரையில், தனியார் நிறுவனங்களுடன் அமெரிக்கா கைகோர்த்ததற்கான காரணம், இந்திய அரச நிறுவனங்களுடன் கூட்டுச் சேரும் போது அரச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படலாம் என்பதாகும். தனியார் மூலம் திட்டங்களை முன்னெடுப்பது செயற்திறன்மிக்கது மட்டுமன்றி, நடைமுறைக்கும் இலகுவானது என்பதை இந்திய அரசு உணரத்தொடங்கியுள்ளது என்று புதுடெல்லியைத் தளமாகக் கொண்டு இயங்குகின்ற ஒப்சேவர் றிசேச் பவுண்டேஷன் *(Observer Research Foundation)* என்ற அமைப்பின் மூலோபாயக் கற்கைநெறிகளுக்குப் பொறுப்பாக இருக்கின்ற துணைப்பேராசிரியரான ஆதித்திய கௌதாரா சிவமூர்த்தி கருத்துத் தெரிவித்தார். தெற்காசிய நாடுகளைப் பொறுத்தவரையில் அமெரிக்கா நிதியுதவியை வழங்குவதோடு நிறுத்திக்கொள்கிறது. இவ்வாறு தனியார் அமைப்புகளுடன் கூட்டுச் சேர்வது அந்த நாடுகளில் அமெரிக்கப் பிரசன்னத்தை வலுவாக்க உதவிசெய்யும்.

500 மில்லியன்கள் அமெரிக்க டொலர்கள் பெறுமதி வாய்ந்த மின்சக்தியைக் கடத்துகின்ற கட்டமைப்பை *(Power Transmission Lines)* நேபாள நாட்டில் உருவாக்கி, அங்கே உருவாக்கப்படும் மின்சக்தியை இந்தியாவுடன் பகிர்ந்துகொள்ளும் முயற்சிக்கு, இந்தத் திட்டம் ஒரு அமெரிக்க இராணுவத் தளத்தை நிர்மாணிக்கும் உள்நோக்கம் கொண்டது எனக் கருதப்பட்டதால் இந்திய எதிர்க்கட்சிகளிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது.

மில்லேனியம் சலெஞ் *(Millennium Challenge)* என்ற அமெரிக்க நிறுவனத்துடன் இணைந்து நேபாளம் முன்னெடுத்த இந்த அபிவிருத்தித் திட்டம், 5 வருடங்களாகத் தொடர்ந்து இழுபறி நிலையில் இருந்து வந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதத்தில் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இந்திய வர்த்தகர்களோடு இணைந்து செயற்படுவதன் மூலம் இவ்வாறான தடைகளை அமெரிக்காவால் எதிர்காலத்தில் தாண்டக் கூடியதாக இருக்கும் என்று சிவமூர்த்தி கூறினார். அமெரிக்காவிடம் நிதியும் இவை தொடர்பான தொழில்நுட்ப அறிவும் இருக்கிறதென்பது இந்தியாவுக்குத் தெரியும். அதே சமயம், இவ்வாறான நாடுகளில் திட்டங்களை எப்படி முன்னெடுக்கலாம் என்ற பட்டறிவு இந்தியாவுக்கு இருக்கிறது என்பது அமெரிக்காவுக்குத் தெரியும்.

இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, சீனா முன்னெடுக்கும் வர்த்தக முயற்சிகள் காத்திரமானவை. எப்படிப்பட்ட பிரதேசங்களை புதுடெல்லி தனது மூலோபாயப் பிரதேசங்கள் என்று பாரம்பரியமாகக் கருதியிருந்ததோ அவ்வாறான பிரதேசங்களில் குறிப்பாக சிறீலங்கா, மாலை தீவு போன்ற இடங்களில் கடந்த சில வருடங்களாகச் சீனா தனது செல்வாக்கை அதிகரித்து வந்திருக்கிறது

### மாலைதீவை விட்டு இந்தியா வெளியேறுகிறதா?

"ஒரு சமநிலையை எவ்வாறு காணலாம் என்பதே இங்குள்ள கேள்வி. கடைசியாக, களநிலைமை என்று வருகின்ற போது வெற்றிபெறுகின்ற ஆற்றல் யாருக்குள்ளது என்பது தான் முக்கிய கேள்வி" என்று இலண்டன் கிங்ஸ் கல்லூரியில் *(London Kings College)* பன்னாட்டு உறவு விடயத்தில் பேராசிரியராகப் பணியாற்றுகின்ற ஹாஷ் பான்ட் *(Harsh Pant)* தெரிவித்தார். தனது செல்வாக்கை சீனா மிகவும் வேகமாக அதிகரித்துச் செல்லும் யதார்த்தத்தை அமெரிக்கா புரிந்துகொள்கிறது. ஆகவே முற்றிலும் புத்தம் புதிய வகைகளில், இந்தியாவுடன் இணைந்து பணியாற்றும் தேவை இருக்கிறது என்று அமெரிக்கா கருதுகிறது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன்னந்தனியனாக தனது செல்வாக்கைப் பேண முடியும் என்று நீண்ட காலமாக இந்தியா சிந்தித்து வந்தது. தொடர்ந்து தாம் தனியாக இயங்க முடியாது என்பதை தற்போது இந்தியா மிக நன்றாகவே உணர்ந்திருக்கிறது. ஒத்த சிந்தனையைக் கொண்ட நாடுகள் இணைந்து பணிபுரியாது சமநிலையைப் பேண முடியாது என்பது தற்போது புரிந்துகொள்ளப்படுகிறது.

இவ்வாறான சிந்தனை கொண்ட ஜப்பான், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளும் இங்கு இணைந்துகொள்ள வேண்டும். இந்தியாவிடமும் அவ்வாறான சிந்தனையைக் கொண்ட ஏனைய நாடுகளிடமும் அவ்வாறான ஒரு முனைப்பைப் பார்க்கக்கூடியதாகவிருக்கிறது.

இவ்வாறான விடயங்களை எதிர்காலத்தில் அதிகமாகவே எதிர்பார்க்கலாம் என்று பான்ட மேலும் கூறினார்.

**நன்றி: *South China Morning Post***

## பண்ணையாளர்... தொடர்ச்சி ...

வந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் அவர்கள் குறித்த பண்ணையாளர்களால் எதுவும் செய்யமுடியாது.சட்ட விரோத குடியேற்றக் காரர்களை வெளியேற்றுவது கடினம்.

அவர்களை எதுவும் செய்யமுடியாது. நீங்கள் போராட்டத்தினை முடித்துவிட்டு தொழிலைப்பாருங்கள் என்று தெரிவித்திருக்கின்றார். அவ்வாறானால் இவர்கள் பாராளுமன்றத்திற்கு செல்லவேண்டிய அவசியம் இல்லையென பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.மாவட்டத்தில் நடக்கும் பிரச்சினைகளுக்கு எதிராக செயற்படமுடியாதவர்களால் எவ்வாறு தமிழ் மக்களுக்கான உரிமைகளைப்பெற்றுக்கொடுக்கமுடியும் எனவும் அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர்.

இவ்வாறான நிலையில் பண்ணையாளர்கள் முன்னெடுத்துவரும் போராட்டம் என்பது வெறுமனே பண்ணையாளர்களின் போராட்டமாக மட்டும்பார்க்காமால் தமிழ் தேசியத்தினை சிதைக்கும் செயற்பாடாக பார்க்க வேண்டும். கிழக்கில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் எதிர்காலத்தில் வடகிழக்கில் தமிழர் தாயகத்தின் இருப்பிற்கான பெரும் ஆபத்தாக நோக்கப்பட்டு வடகிழக்கு இணைந்த செயற்பாடுகள் பண்ணையாளர்களுக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே இன்றைய காலத்தின் கட்டாயதேவையாகவுள்ளது.

• • •

## மத்திய கிழக்கு ... தொடர்ச்சி ...

பயங்கரவாதத்தை தடுத்தல், கடல்பாதைகளை பாதுகாத்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபடும். உலகின் மிக முக்கிய கப்பல் போக்குவரத்து பாதைகளை கொண்ட 3.2 மில்லியன் சதுரமைல் பரப்பளவுள்ள கடல் பகுதிகளை இந்த கூட்டணி பாதுகாப்பதில் ஈடுபட்டுவருகின்றது.

## ஐ.நாவின் சரத்து ... தொடர்ச்சி ...

ஐக்கிய அரபு அமீரகம் மனிதாபிமான போர் நிறுத்தம் குறித்த தீர்மானம் ஒன்றை ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரவுள்ளதாக தெரிவித்துள்ளது. எனினும் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் கொண்ட அமெரிக்கா, ரஸ்யா, சீனா, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளை மீறி இந்த தீர்மானம் நிறைவேற்றப்படுமா என்பது கேள்விக் குறியானதே.

பல தடவைகள் தீர்மானத்தை பிரித்தானியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் முறியடித்திருந்தன.

## பயிரை மேயும் ... தொடர்ச்சி ...

பெற்றுக்கொண்ட போதும் காணியுரிமை மற்றும் வீட்டுரிமை இல்லாமை இதன் உண்மையான பயன்களை அனுபவிக்க தடையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீடு என்பது தனிப்பட்ட வாழ்க்கை நடைமுறை மற்றும் சமூக ஊடாட்டம் என்பவற்றில் செல்வாக்கு செலுத்தும் காரணியாக மாறியுள்ளது. பெருந்தோட்ட மக்களைப் பொறுத்தவரையில் தனியான வீடு மற்றும் காணியுரிமை இன்மையானது அவர்கள் குறித்த மதிப்பீடு மற்றும் கௌரவத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. தனியான வீட்டினை உரித்தாக்கிக் கொள்ளல் என்பது ஏனையவர்களின் கட்டுப்பாடு மற்றும் அறிவுறுத்தல்களில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ்வதற்கு வழிசெய்கின்றது' என்று கல்விமான் எம்.வாமதேவன் சுட்டிக்காட்டியுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கதாகும். எனவே மலையக மக்களின் காணியுரிமையும் வீட்டுரிமையும் பேச்சளவில் முற்றுப்பெற்று விடாது நடைமுறை சாத்தியம் மிக்கதாக இருக்க வேண்டும்.